92

ஜகன்மோகினி

JAGANMOHINI 25th YEAR—1948

1—9—1948 மலர் 25. இதழ் 9 அணா நான்கு.

92



JL
2211, 2225M.
A148·25·9

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு — திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. — வீரராகவ கவி

Vol. 25. ஸர்வதாரி, சுதந்தர சகாப்தம் SEPTEMBER.
No. 9. ஆவணி மீ 14-ம் திங்கள். 1948.

பெண்மை பொலிக!!

இன்று இந்தியா சுதந்தரநாடாக விளங்குகிறதென்றால் அதன் பெருமை ஆண்களுக்கு மட்டுமன்று; பெண்களுக்கும் உண்டு; கஸ்தூரிபா, சரோஜனி, கமலா, அமிர்தகௌரி முதல், மதுரை பத்மாஸனிவரையில் ஏராளமான பெண்மணிகள் சுதந்தரக்கொடி பிடித்து நாட்டுக்காகத் தியாகம் செய்தனர். இப்பெண்சக்திகளில் ஜகன்மோகினி ஆசிரியை வை. மு. கோதைநாயகி அம்மையாரை வைத்து மதிக்கவேண்டும். அவர், பெண்சமூகத்திற்காகச் செய்துள்ள தொண்டு மிகப்பெரிது. தமிழ்நாட்டில் கதைஇலக்கிய ராணி என்ற பட்டம் இவருக்கே தகும். இவர் கதைகள் உள்ளத்திற் பூத்த அனுபவக்கதைகள். அவை பல்லாயிரம் பேர்களுக்கு ஆறுதல் தருகின்றன. ஜகன்மோகினிமூலம் இவர் பெண்ணுலகிற்கும், தமிழுக்கும், ஹிந்துதர்மத்திற்கும் செய்துவரும் தொண்டுகள் மிகப் பெரியன.

தெய்வ பக்தியும், தேசபக்தியும், நல்ல பத்தினி வாழ்வும், பொதுநல ஊக்கமும், காந்திப்ரேமையும் கொண்ட இந்த அம்மையாரைத் தமிழுலகம் போற்றுவது தமிழருக்கே தனிச்சிறப்பாகும்.

இக்காலம் எங்கும் பெண்ணுரிமைபேசுகின்றனர். பல்லாண்டுகளாக எழுத்தாலும் செயலாலும் அரிய பொதுநலம் புரிந்துவரும் ஜகன்மோகினி அம்மையாரைச் சிறப்புறுத்த வேண்டியது தமிழர் கடமையாகும். ஆண் எழுத்தாளருக்கும் கவிகளுக்கும் வேண்டிய ஆதரவு தந்த தமிழகம் ஒரு பெண் எழுத்தாளிக்குரிய மரியாதையைச் செலுத்துவது பராசக்தியான பெண்மையைப் பெருமை செய்வதாகும்.

—ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

நினைப்பதுபோல் நடப்பதில்லையே!

எல்லாம் ஈசன் செயல்

சென்ற ஆகஸ்ட் மோகினியில் 4–6- பக்கங்களில் "நினைத்ததொன்று, நடந்ததொன்று": மோகினி அபிமானிகளுக்கு ஒரு விண்ணப்பம் என்னும் தலைப்பின் கீழ் 5-வது பக்கம் கடைசி பத்தியில்

> "இவ்விழாவை ஒரு சிறந்த மகாநாடுபோல் கொண்டாடிக்களிக்க எண்ணினேம். ஆனால் இன்று வாசகர்களும் கமிட்டியார் பலரும் அசிரத்தையாக இருப்பதை நோக்கினால் அம்மாதிரி சிறப்பான முறையில் நடத்த முடியாதெனினும் விழாவைக் கட்டாயம் விநாயக சதுர்த்தியன்று நடத்தியே தீருவோம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்."

என்று எழுதினதானது சில மோகினி அபிமானிகளுக்கு நான் வெகு கடுமையாக எழுதிவிட்டதாகவும் அது அவர்களுக்கு அதிக மனக்கிலேசத்தை உண்டாக்கியதாகவும், நான் அதையே சற்று நாசுக்காய் எழுதியிருக்கலாமென்றும் அதை பொருட்படுத்தாது இனி அவர்களெல்லோரும் என்னுடன் ஒத்துழைப்பதாயும், முதலில் நினைத்தபடி சிறந்த மகாநாடுபோல் நடத்துவதுதான் சரியென்றும், இச்சந்தர்ப்பத்தைக் கைவிட்டால் மீண்டும் இவ்வரிய சந்தர்ப்பம் வாய்ப்பது அருமையென்றும் இக்குறுகிய காலமாகிய செப்டம்பர் மீ 6 உக்குள் அவ்வாறு செய்து முடிப்பது சாத்யமில்லையென்றும், அவர்களது அபிப்ராயத்தில் இவ்விழாவையொட்டி ஒரு தனி மலர் வெளியிடுவது அத்யாவசியமெனவும், மோகினி ஆரம்பித்த நாள் விநாயசதுர்த்தியன்றேயொழிய, மோகினி 25-ம் வருஷ முடிவு டிசம்பர் மாதமேயாதலாலும், இவ்விழாவை டிஸம்பர் மீ கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் வைத்துக்கொண்டால் வெளியூர் அபிமானிகள் எல்லோரும் வருவதற்கு சௌகரியமாயிருக்குமென்றும் தங்கள் ஒத்துழைப்பின் பலன் அப்போதுதான கிட்டுமென்றும், ஆதலால் மோகினி வெள்ளிவிழா கொண்டாட்டத்தை 1948-ம் வருஷ டிஸம்பர் மாதக் கடைசி வாரத்தில் வைத்துக்கொள்ளுமபடியும் மிகவும் கேட்கிறார்கள்.

மேலும் ஷை மோகினி 6-ம் பக்கம் முதல் பத்தியில் 'இன்னமும் உதவி புரியுங்கள், ஒத்தாசைசெய்யுங்கள் என்று கேட்கப்போவதில்லை' என எழுதிய பின்னும் பின் கண்ட தொகைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

1—9—1948

43. K. லக்ஷ்மி சௌரிராஜன், திருவல்லிக்கேணி. ரூ. 10.
44. வேதவல்லி, c/o வரதராஜன், பேர்பீல்ட். 2.
45. S. அலமேலு, பங்களூர். 5.
46. "குகப்ரியை" (ஸ்வர்ணம்மாள்), மயிலை. 10.
47. தில்லையம்மாள், பெரியநாயக்கன்பாளயம் 5.
48. K. கனகவல்லி, மாம்பலம். 5.
49. சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள், மயிலை 51.
50. K. ரங்கஸ்வாமி ஐயங்கார், மாம்பலம். 25.
51. M. S. கமலா, திருவட்டீச்வரன்பேட்டை. 5.
52. K. வேதவல்லி, வெங்கடாபுரம். 5.
53. K. E. குமுதவல்லி, சிங்கப்பெருமாள்கோவில். 5.

[திருத்தம்:—"ஸ்ரீராமசந்திரன், ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் வியாபாரி" என்று சென்ற இதழில் அச்சாகியிருப்பது "ஸ்ரீ. K. S. சீதாராமன், சீதாராம் & கம்பெனி, ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் வியாபாரி" என்று இருக்கவேண்டும்]

இன்னும் பலர் அனுப்ப உத்தேசித்திருக்கிறார்களென்றும் தெரிவிக்கின்றனர்.

உண்மையில் எவர் மனதையும் நோகவைக்க—வேகவைக்க—மனக்கிலேசமடையச் செய்யவேண்டுமென்று நான் கனவிலும் கருதவில்லையென்றும் நான் க்ஷத்திரியனாதலால் மனதிலிருப்பதை அப்படியே எழுதுவதே என் பிறவிக்குணமென்றும் ஆதலால் நான் தெரிந்தோ தெரியாமலோ எழுதினதைக் குற்றமாகக் கருதாதிருக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முன் தீர்மானித்தபடி மோகினி வெள்ளிவிழாவை செப்டம்பர் 6வ நடத்துவதாகில் அபிமானிகளின் கோரிக்கையின்படி வெள்ளிவிழாமலர் பிரசுரிக்கமுடியவே முடியாதாகையாலும் அவர்கள் திரிகரணசுத்தியாய் ஒத்துழைத்து ஷ விழாவை மகாநாடாக நடத்தவேண்டுமென்று சொல்வதை உதாசீனம்செய்து இப்போதே நடத்தித்தீர்ப்பதென்று பிடிவாதம்பிடிக்க விரும்பாததாலும் ஷ மோகினி வெள்ளிவிழாவை—கமிட்டியார் அங்கீகாரத்தை எதிர்பார்த்து—டிஸம்பர்மாதம் கடைசிவாரத்துக்கு ஒத்திவைப்பது நலமென்பதையே கமிட்டி அங்கத்தினர்களுக்கு சிபார்சும்செய்கிறேன்.

சென்ற இதழ் வெளியான பிறகு எமக்கு வந்துள்ள கடிதங்களுள் முக்கியமாக மூன்றைக் குறிப்பிடுகிறேன்.

ஸ்ரீ வாசவன், ஆசிரியர், "பேசும் குரல்" எழுதினர்: தமிழர்கள் ஆதரவு காட்டாததைக் குறித்து வருத்தத்துடன் அறிக்கை விட்டிருப்பதைப் பார்த்தேன். உள்ளத்தை உருக்குகிறது. கடமையைச் செய்யத் தூண்டுகிறது....

ஜகன்மோகினியின் ஸேவை மகத்தானது; பெருமைப்படத் தக்கது. தமிழ்இலக்கியத்தின் வளர்ச்சியில் அது பங்கு கொண்டு, காலவெள்ளத்திலெல்லாம் தைரியத்துடன் நீந்தி இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. அதைக் குறித்து நீங்கள் மட்டுமல்ல; நான் மட்டுமல்ல ; தமிழர்கள் எல்லோருமே பெருமைப்பட்டுக்கொள்ள உரிமையுள்ளவர்களாகிறார்கள்".

(2-8-48.)

பேராசிரியர் S. வையாபுரிப்பிள்ளை எழுதினர்:—"... தங்கள் நன்முயற்சி மிக அவசியமென்றே தோன்றுகிறது. பல ஆண்டுகளாக நமது தமிழ் மக்களுக்கு அறிவூட்டி அவர்களை இன்புறுத்திவரும் இந்தத் தமிழ்ப் பத்திரிகை தமிழுலகில் ஒரு சிறந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. இதனைத் தக்கபடி பாராட்டுவது தமிழ் மக்களின் கடமை யாகும். தாங்கள் மேற்கொண்டுள்ள இந்த நன் முயற்சி இனிது நிறைவேறுமாறு இறைவனைப் பிரார்த்திக்கிறேன்."

(3-8-48)

ஸ்ரீ. ரா. கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர், "கல்கி", எழுதினர்:—"ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் அவர்கள் தாய் நாட்டுக்கும் பெண் குலத்துக்கும் இடைவிடாத தொண்டு புரிந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் நடத்தும் ஜகன்மோகினிக்கு இருபத்தைந்தாண்டு நிரம்புகிறது என்று அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வெள்ளி விழா இனிது நடைபெறுவதோடு உரிய காலத்தில் தங்க விழாவும் வைரவிழாவும் நடைபெற வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்." (11-8-48)

ஷைவிழாவை மகாநாட்டைப்போல் நடத்துவதற்கு என்னென்ன யார்யார்செய்வதென்று ஆலோசித்து முடிவு செய்வதற்காக, 6-9-48 திங்கட்கிழமை முக்யஸ்தர்களின் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

"இன்னமும் உதவிபுரியுங்கள், ஒத்தாசை செய்யுங்கள்" என்று கேட்கப்போவதில்லை என்பதுமட்டும் இப்போதும் நிச்சயம்தான். ஏனெனில், இவ்வெள்ளிவிழாக்கொண் டாட்டம் பணம்பறிப்பதற்காக நடத்தப்படவில்லை.

ஆனல், அவர்களாக திரிகாணசுத்தியாக மனமுவந்து அனுப்பும் ஆலைகள், யோசனைகள் வந்தனத்துடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

வெள்ளிவிழா டிஸம்பருக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள தால் சிறுகதைப்போட்டியின் முடிவும் பிறகே வெளியா கும் என்பதைப் போட்டிக்குக் கதையனுப்பியுள்ளவர்கள் கவனிக்கவும்.

நாம் நினைக்கிறபடியோ, விரும்புகிறபடியோ காரி யாதிகள் நடப்பதில்லை. எல்லாம் ஈசன்செயல்.

28-8-48. — ஜெகதாபி ரகுபதி ரங்கராஜு.

என் பெருமை

நான் இதற்கு முன், எனது முன்னோர்களின் சரித்திரத்தை நந்தவனத் தொடரில் எழுதியதை நேயர்கள் பார்த்திருக்கலாம்.

அது என் சிறிய தாயாராகிய ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாளின் ஆர்வத்திற்கு இணங்கி எழுதினது. அதன் பிறகு எனக்கு முன்னோர்களின் பெருமையில் ருசி ஏற்பட்டுவிட்டது. என் சித்தி என்கிற முறையில் சொந்த உரிமையுடன் ஜகன்மோஹினியின் வாயிலாகவே என் பெருமையை எடுத்துக்கூற ஆவலுற்று என் கடமையையும் தொண்டாற்றுகின்றேன். என் சித்தப்பாவின் பத்தினியைப் புகழ்வதும் போற்றுவதும் இயற்கையே.

ஜெகன்மோகினியின் வெள்ளிவிழா மஹோத்ஸவத்தில் அதன் ஆசிரியை ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் அவர்களை பந்துக்கள் ஒரு புறமும் மித்ரர்கள் ஒருபுறமும் கண்ணாரக்காணவும் வாயாரப் புகழவும் போற்றவும் ஏற்ற ஒரு அரிய சந்தர்ப்பம் ஸ்ரீ பார்த்தஸாரதியின் கருணை கடாக்ஷத்தினால் ஏற்பட்டிருக்கிறது.

நாட்களையும் வாரங்களையும் கணக்கிட்டு நடத்துகிற விழாக்களை தினஸரிப் பத்திரிகையில் காண்கின்றோம்.

இந்தக் கலியில் 25 வருடகாலம் ஒரு நீண்டகாலம்; ஒரு யுகம்போல் நாம் மதிக்கவேண்டும். நாம் வெகு ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த நன்னாள்.

இன்று ஜெகன்மோஹினி ஜெகன்மோஹன சிங்காரமாய், அலங்கார பூஷிதையாய் மோஹினி என்றே அழைக்கப்பட்டு பெரிய பண்டிதர்களால் போஷிக்கப்பட்டு, கலா வல்லப வித்வாம்சினியாய் விளங்குகிறது.

"ஒருமகள் தன்னை யுடையேன் உலகம் நிறைந்த புகழால்" என்கிறார் பெரியாழ்வார்.

அது போலவே ஜெகன்மோஹினி நம் நாட்டிற்கு ஒரே சஞ்சிகை உலகம் நிறைந்த புகழோடு கூடியது ஒரே பெண்ணெழுத்தாளர், பத்திரிகாசிரியை, உலகம் நிறைந்த புகழோடு விளங்குகிறார்.

நாவல்களில் முதல் ஸ்தானத்தில் ரத்னமாய் ப்ரகாசிக்கிறது.

100-ஸ்திரீ எழுத்தாளர்களைக் கண்டெடுத்த நந்தவனம் வேறு ஒரு புறம் செழித்து வளர்கிறது. 25 வருடமாய் பிறந்ததுமுதல் கீர்த்திக் கவசமணிந்து வளர்பிறைபோல் வளர்ந்து முழுமதிபோல் மக்களின் மதியை ப்ரகாசிக்கச் செய்கிறது, அரசியல் புரட்சியில் வீரனாய் விளங்கிற்று. சதா ரூபமாகவே ப்ரசாரம்; ம்றியல் கதர் அபிவிருத்தி தீண்டாமை மதுவிலக்கு இன்னும் காங்கிரஸின் கொள்கைகளனைத்தையும் பாலர் பகுதியில் படிக்கும் சிறுமிகள்முதல் அடுப்பூதிப் பெண்கள் பாட்டிமார்கள் ஸோடாக் கடைக்காரர்கள் ஓட்டல்காரர்கள், மளிகைக் கடைக்காரர்கள் கல்வியில்லாத தொழிலாளர் முதலானவர்களுக்கும் தேசீய விஷயங்களையும் அரசியல் முறைகளையும் காலப் போக்கையும் நாட்டின் நிலைமையையும் மிக்க கவனத்துடன் நாட்டின் நன்மைக்கே பயன்படுமாறு நாவலாகவே உதவியிருக்கிறார். எப்படி ஒரு நோயாளிக்கு மருந்தை சர்க்கரையில் கலந்து கொடுக்கிறார்களோ, அது போலவே நாட்டிற்கு மோஹினி தேனும் பாலும் அமுதமும் சர்க்கரையும் கற்கண்டுமாகவே உதவி செய்கிறது. விரோதியைத் தாக்குவதில் ஒரு பலமான ஆயுதம்போல் காண்டீபம் எனத் தோற்ற மளிக்கும்; துராசாரங்களைக் களைவதில் பயிரின்மத்தியில் முளைக்கும் புல்லைக்களையும் களைக்கொத்துப் போன்றது.

யுத்தகாலத்தில் நம் இந்தியதருப்புகளுக்கு மோகினி பெரிதும் உற்சாகமளித்ததாம். மோகினியின் வரவை சாதகபக்ஷிபோல் எதிர்பார்ப்பார்களாம். அவர்களின் மனப்புண்ணிற்கும் சோர்வுக்கும் சஞ்சீவிபோல் மருந்தென உதவியதாம். தாபத்திற்கும் சாந்திக்கும் பரம ஔஷதமாய் உதவிய மோஹினி ஆசிரியைக்கு எத்தனை புண்யம் உண்டு என்பதை அளவிடமுடியாது.

சிலோன், மலேயா, பர்மா, முதலிய வெளிநாட்டிலுள்ள தமிழபிமானிகள் மோஹினியிடம் அமோஹமான மோஹமும் அபிமானமும் நன்மதிப்பும் அக்கரையும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். மோஹினி ஆசிரியரோடு கூடிக்குலாவும் இந்தியர் என்ன பாக்கியம் பெற்றவர்களோ என்றே ஏங்குகிறார்கள். வெள்ளிவிழாக் கொண்டாட்டம் எத்தனை ப்ரஸித்தமாய் கொண்டாடப்போகிறார்கள் என்பதை அறியவே ஆவல் கொண்டவர்கள் தூரத்தில் காத்திருக்கிறார்கள்: நாம் அருகிலிருந்துகொண்டே எப்படி நடத்துவது என்பதே தெரியாமல் விழிக்கிறோம். மோஹினி ஆசிரியை இம்மாதிரி திருவிழாக்கள் நடத்துவதில் வெகு உத்ஸாகமும் நிர்வாக சக்தியும் விதரணையும் தெரிந்த வல்லமைசாலி. அவர்களுக்கு செய்யப்போகும் விழாக்கொண்டாட்டம் பெரிய மனிதர்களால் நினைக்கவும் அருகதையில்லை.

என் சிறியதாயார் உறவு முறையில் பெரிய ஸ்தானத்திலிருப்பவரே ஒழிய வயதில் எங்களுக்குள் பெரிய வித்யாசம் கிடையாது. ஆகையால் பாலியம் முதல் நாங்கள் ஒரே தெருவில் வளர்ந்தவர்கள். அவர் ஓர் அதிசயச்சிறுமியாகத்தான் விளங்கினார். சங்கீதம் சாரீரம் அப்யாசம் கவனம் கற்பனை ஆகிய அம்சங்களை வித்யாரம்பத்திலேயே குருவை வென்று கட்டுக்கடங்காமலேயே தனக்கென ஒரு பாணி அமைத்துக்கொண்டு வித்வத்கோஷ்டியில் சேர்ந்துவிட்டார்.

அந்தகாலத்தில் அவர்களின் பெற்றோர் பாட்டி முதலிய பெரியோர்கள் அதி ஆச்சர்யத்துக்குட்பட்டார்கள். அவர் சகோதரிகள் நல்ல ஞானஸ்தர்களாயிருந்தும் ப்ரமித்துப்போய்விட்டார்கள். ஊரிலுள்ள ரஸிகர்களும் அதிசயப்பிறவி என்று கூறிக்கொண்டே ரஸிப்பார்கள். அப்பொழுதும் ஊருக்கெல்லாம் ஒரே பாடகி சின்னஞ்சிறு பெண், பெரிய கண்டம், கடல்போல கமகம், விசாலமான சஞ்சாரம், கனம், நயம், பிகு, பிர்கா, மூன்றுஸ்தாயியிலும்பேசும் சுத்த சாரீரம், ஸாஹித்தியங்களை உச்சரிப்பதில் ஒரு தனியழகு, பாவம் நிறைந்த நிரவல், தலைகூட அசையாமல் பாடும் சொகுஸு, இத்தனையும் அமைந்து புகழ்ச்சியைக் கொடுத்தன. ஈச்வர பக்தி பெரியோர்களிடம் பணிவு இந்த இரண்டு அம்சங்களே அவரை அனுக்ரஹத்திற்குள்ளாக்கின. உண்ணும்போதும் உறங்கும்போதுங்கூட ஓய்வையும் தனி வாழ்க்கையையும் விரும்பாதவர். எப்பொழுதும் கூடி வாழ்வதிலும், வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் ஹாஸ்யமும் கேளிக்கையும் குதூஹலமும் நிறைந்து, பொழுதுபோக்குவதே தெரியாது வாழ்பவர். நாட்டிற்குப் பணிசெய்ய இறங்கியபிறகு மனோ, வாக்கு, காயம் ஆகிற மூன்றையும் உழைக்கவே அர்ப்பணம் செய்துவிட்டார். சொகுஸாய் பாடிய பாட்டு குரல்கிழியக் காட்டிலும் மேட்டிலும் கதறத் தொடங்கிவிட்டது. இனிய பேச்சுகள் எல்லாம் கூட்டத்தினிடையே கோஷிப்பதற்கே ஏற்பட்டுவிட்டன. சதா ஸர்வகாலமும் எந்தவேலை செய்யலாம் என்கிற பதட்டமே அப்யாஸமாகிவிட்டது. குரல்மாறி உடல்மாறி மற்றொரு பிறப்பு எடுத்து தேகம் தெரியாமல் தன்னைமறந்து பொதுஜன ஸேவைசெய்து வாழ்கிறார்.

வாழ்க ஜகன்மோகினி. வருக போன் விழா.

—A. ராஜம்மாள்

மகாத்மாஜி ஸேவா சங்கம்

எப்போதும் நல்லவிஷயத்தில் பெருமைபடக்கூடிய அம்சங்களைச்சொல்வதென்றால் அதில் ஒரு தனித்த இன்பமும் கவுரவமும் கூட உண்டு. இது உலகமறிந்த உண்மை....இந்த வகையில் நமது ஸேவாசங்கத்தின் வளர்ச்சியையும், அதன் ஸேவையையும் சொல்வதில் நாங்கள் பரம த்ருப்தியடைந்து மகிழ்கிறோம். ஆடிமாதம் 5 வெள்ளிக்கிழமைகளும் அதி அத்புதமான சங்கீதக்கச்சேரிகளுடன் ஸ்ரீமகாலக்ஷ்மியின் விக்ரக அலங்காரத்துடன் விழா வெகு சிறப்பாக நடந்தது...

ஆடி முதல் வெள்ளிக்கிழமையன்று, ஸ்ரீமதி சேலம் காமாக்ஷியம்மாளின் தலைமையில் கீதாவகுப்பில்தேரிய மாணவிகளுக்குப் பரிசுவழங்கும் விழா நடந்தது. அன்று ஸ்ரீமதி ஸீதாபாய் வாய்ப்பாட்டும் ஸ்ரீமதி சுபத்திரா பிடிலும் வாசித்தார்கள். இரண்டாம் வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீமதி மாலதீதேவி, வெகு அருமையாக பக்கவாத்யத்துடன் பாடினார்கள். சிலர் பேசினார்கள். மூன்றும் வெள்ளிக்கிழமையன்று சங்கத்தின் அங்கத்தினர் பலர் வெகுவெகு அத்புதமாய் பக்கவாத்யத்துடன் பாடி சபையோர்களை மகிழ்வித்தார்கள்.

நான்காம் வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீமதி A. ராஜம்மாள் அவர்கள் ப்ரபந்தப்பண்ணிசை விருந்தையளித்து மகிழ்வித்தார்கள். வரலக்ஷ்மி வ்ருதத்தன்று ஸ்ரீமகா லக்ஷ்மிவிக்ரகத்திற்கு அத்புதமான திருக்கோலம் சமர்ப்பித்து கல்யாண உத்ஸவம் நடந்தது. அன்றும் சங்கத்தின் பல அங்கத்தினர்கள் பக்கவாத்யத்துடன் பாடினார்கள்-

15ந் தேதி சுதந்திரவிழா அதியத்புதமாக நடந்தது. காலை 8-மணிக்கு ஸ்ரீமதி காயனபடு கீர்த்தனபடு ஸரஸ்வதிபாய் அவர்களால் கொடியேற்றுவிழா நடந்தது. தலைவி ஸ்ரீமதி ருக்மிணி லக்ஷ்மீபதி பேசினார்கள். மாலை 4 மணிக்கு ஏராளமான பெண்மணிகள்கூடி தேசியக்கொடியைத்தாங்கி ஊர்வலம் நடந்தது. மாலை விழாவுக்கு ஸ்ரீமதி விசாலாக்ஷி விச்வநாதன்(காசினி)தலைமைவகித்தார். மகாத்மா காந்தி தம்பதிகளின் படத்தை ஸ்ரீமதி காமாக்ஷியம்மாள் திறந்து வைத்தார்கள். சங்கத்தின் அங்கத்தினர்கள் கீதாபாராயணத்துடன் விழா ஆரம்பமாகியது. பல அங்கத்தினர்கள் அதி அத்புதமாகப்பேசியும் பாடியும் சபையைப் பரவசமூறச்செய்தார்கள். பிறகு தலைவி வெகுவெகு அழகாகப்பேசியதும் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது. சங்கத்திற்கு, மகாத்மா காந்தியின் உருவப்படத்தை டாக்டர். K. ராமானுஜம் அவர்கள் பரிசளித்தார்கள். காந்திஜி தம்பதிகளுடைய பெரிய உருவப்படத்தை, V. M. ஸ்ரீனிவாஸன் தம்பதிகள் பரிசளித்தார்கள். அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக எமது மகிழ்ச்சியையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு சந்தோஷச் செய்தி

21-ந் தேதியன்று மாலை 6 மணிக்கு மேன்மை தங்கிய கவர்னர்ஜெனரல் ஸ்ரீ ராஜாஜி அவர்களின் அருமைப் புதல்வி ஸ்ரீமதி

நாமகிரிதேவியார் சங்கத்திற்கு வெகுஅன்புடனும் உத்ஸாகத்துடனும் விஜயம் செய்தது சங்கத்தின் வளர்ச்சிக்குச் சிகரம் வைத்ததுபோலிருக்கிறது. நமது சங்கத்தின் தலைவி ருக்மிணிலக்ஷ்மீபதியவர்கள் அவரை வரவேற்றுச் சபையோருக்கு அறிமுகம் செய்தார்கள். சங்கத்தின் அங்கத்தினர்கள் கீதா பாராயணமும், கோஷ்டி கானமும் பாடினார்கள்; காலஞ்சென்ற டாக்டர் தேவாஜி ராவின் குமாரி ப்ரேமா நாட்டிய விருந்தளித்தாள். சென்னை ரேடியோ நிலையத்து ஸ்ரீமதி கண்ணம்மாள் வீணையுடன் ப்ரம்மாநந்தமான இசை விருந்தளித்து இன்பமூட்டினார்கள். காயனபடு கீர்த்தனபடு ஸரஸ்வதிபாய் அவர்கள் பாடிப் பரவசமுறச்செய்தார்கள். பிறகு, ஸ்ரீமதி நாமகிரிதேவி சங்கத்தில் சர்க்கா வகுப்பையும், தையல் வகுப்பையும் திறந்துவைத்து அதி ஆச்சரியமாய் முக்யமான விஷயங்களை வெகு அழகாகப் பேசி மகிழ்வித்தார். அவர் பேசியபோது அசல் அவருடைய பிதா பேசுவதுபோலவே அத்தனை அழகாயும் அழுத்தமாயும் இருந்தது. அன்று நம்மாழ்வார் மாளிகையில் நூற்றுக்கணக்கான சகோதரிகள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

மற்றொரு மகிழ்ச்சிகரமான விஷயம்.

25-ந்தேதி பகல். 1 முதல் 1-30 வரையில் அகில இந்திய ரேடியோ மாதர் கழகத்தை நமது மகாத்மாஜி ஸேவாசங்கத்து அங்கத்தினர்கள் நடத்தினார்கள். அதைப் பலபேர் கேட்டிருக்கலாம். அனேக அன்பர்கள் ரேடியோ நிகழ்ச்சியைப் பாராட்டி நேரிலும் கடிதம் மூலமும் எமக்குத் தெரிவித்தார்கள்.

நமது ஸேவாசங்கத்தில் தையல் வகுப்பு ஆரம்பித்தாகி விட்டது. ப்ரதி திங்களும் வியாழனும் பகல் இரண்டு மணிமுதல் நான்கு மணி வரையில் வகுப்பு நடக்கும். முக்யமாகப் பெண்மணிகளுக்கு அந்த நேரந்தான் சற்று ஓய்வு கிடைக்கும் நேரம். அதிலும் தையல் வேலை. மற்ற இதரநூல் வேலைகளும் பெண்களுக்கு அவச்யம் வரவேண்டும் என்பதனால் அந்த நேரத்தில் வைத்திருக்கிறது. மாதம் 8-அணாதான் சம்பளம். சேர விருப்பமுள்ள எல்லோரும் சேர்ந்து கொள்ளலாம். சங்கத்தின் அங்கத்தினர்களுக்குத்தான் இந்த குறைந்த சம்பளத்தில் சலுகை உண்டு. அங்கத்தினரல்லாதவர்களுக்கு மாதம் ஒரு ரூபாய் சம்பளம்.

நிற்க, கவியரசர் பாரதியாரின் தினத்தை யொட்டி அவருடைய பாடல்களைப் போட்டி வைத்திருக்கிறது, அதில் (1) காணி நிலம் வேண்டும். (2) துன்பமில்லாத நிலையே சக்தி (3) கண்ணன் திருவடி (4) காக்கை சிறகினிலே. (5) பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா (6) சொல்லவல்லாயோ கிளியே-ஆகிய ஆறுபாடல்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு எத்தகைய கட்டணமும் கிடையாது. அங்கத்தினர்களல்லாதவர்கள் இந்தப் பாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதாயின் 8 அணா ப்ரவேசக்கட்டணம் கட்டி சங்கத்தில் செப்டம்பர்

7-தேதிக்குள் தம் பெயர்களை பதிவு செய்து கொள்ளவேண்டும். போட்டி என்று நடக்கும் என்பதையும் யார் யார் போட்டியின் நியாயாதிபதிகள் என்பதையும் பின்னர் அறிவிக்கப்படும்.

ஸேவா சங்கத்தின் ப்ரதான கைங்கர்யமாகிய இலவசச் சம்பள நிதிக்கு பல அன்பர்கள் நிதி உதவியிருக்கிறார்கள். முக்யமாக மோகினி அச்சாபீஸ் தொழிலாளர்கள் நன்கொடை யளித்திருக்கிறார்கள். இவ்விதழில் இடமில்லாததால் அடுத்த இதழில் ஜாபிதா ப்ரசுரிக்கப்படும். மோகினியின் அபிமானிகளும் ஆயிரக்கணக்கான வாசகர்களும் மனம்வைத்தால் இந்தமகத்தான வித்யாதானத் திருப்பணிக்கு ஆளுக்கு ஒரு ரூபாய் உதவினால் கூடபோதும். பல துளிபெருவெள்ளமாக ஆய்விடும். மறுபடியும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம். மோகினியின் வாசகர்களும் அபிமானிகளும் இந்த சிறந்த கைங்கர்யத்திற்கு உதவியளித்து ஸேவாசங்கத்தின் ஸேவைகளைப்பலப்படுத்த வேண்டுமாய் ப்ரார்த்திக்கின்றோம்.

வை. மு. கோதைநாயகி
R. ஜெயலக்ஷ்மி
காரியதரிசிகள்.

மேலட்டை விளக்கம்

"கண்ண னுள்ள பக்கம்—அவன்
கருணை வெள்ளத் தாலே
திண்ண மாகும் வெற்றி—அவனே
செயல்களுக் கிறைவன்"

* • *

"தருமத்திற்கு வெற்றி—தெய்வ
சக்தி தன்னை நம்பும்
கருமவீர ருக்கே—வெற்றி
கைக் கனிபோல் வருமே!"

— கவியோகி

இது மகாபாரத உண்மை. கண்ணன் கருணையால் பாண்டவர்களின் சகல இடுக்கண்களும் தீர்ந்து, பாஞ்சாலியின் சபதமும் நிறைவேறிற்று. பகவத் கீதையும் பிறந்தது. "உன் அருளில் வாழுகின்றோம், கண்ணா! அடைக்கலம் புகுந்தோம்" என்று அவனையே நம்பியவர்கள் இறுதியில் வெற்றி பெற்று, ஸ்ரீ கீதாசாரியனுக்கு பக்தி பூர்வமான நன்றிவணக்கம் செய்தனர்.

கண்ணன் கருணையால் நமது ஜகன்மோகினியும் பலவித இடையூறுகளையும் சமாளித்து, தன் சக்தியாநுஸாரம் சரீரசக்தி, அறிவு சக்தி, ஆத்ம சக்தி முதலியவற்றை வளர்ப்பதற்கு அநுகூலமாக அரிய விஷயங்களைத் தாங்கி 25 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்து, வாசக அபிமானிகள் வெள்ளிவிழா கொண்டாடும் நிலைக்கு வந்துள்ளாள். மேன்மேலும் ஸேவை புரிய கீதாசாரியன் அருளுவாராக.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

ஹைஸ்கூல் படிப்பின் முடிவு.

1905-ஆம் வருடம் கோடை விடுமுறையில் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பி பாடசாலையில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன். அந்த வருஷம் 6-ஆவது பாரம். ஆங்கிலம், இரண்டாவது பாஷை லத்தீன், பூகோளம், சரித்திரம், கணிதம், ஸைன்ஸ் இவைகள் யாவும் பரீக்ஷைக்குக் கட்டாயப்பாடங்கள். இந்தக் காலத்தைப்போல 5-ஆவது பாரத்தில் ஒரு இஷ்டமான பாடம் (Optional) எடுத்துக் கொள்வது கிடையாது. 6-ஆவது பாரம் முடிவில் மெட்ரிக்யுலேஷன் பரீக்ஷைக்குப் போவதற்காக 10ரூபாய் பணம் கட்டினோம். நாங்கள் 4பேர்தான் பரீக்ஷைக்கு அனுப்பப்பட்டவர்கள். லீலாகிருஷ்ணராவ் (இப்போது லேடி. ரங்கநாதன்) ரெவரெண்ட் லாஸரஸ் பெண் ஸ்டெல்லா லாஸரஸ், மேரி ராஜம்மாள், நான் நால்வரும் அந்தவருஷம் பரீக்ஷை எழுதியவர்கள்.

பரீக்ஷை டிஸம்பர் மாதம் முடிந்தது. பரீக்ஷையின் முடிவு தெரிவதற்கு ஒரு மாதம் ஆகும். அந்த முடிவு நன்மையாயிருக்கவேண்டுமேயென்று என்தாயாரும் சித்தம்மையும் வேண்டிக்கொண்டது கொஞ்சமல்ல. சென்னைக்குவந்து தனியாக குடித்தனம் வைத்து என்னைப் படிக்க வைத்துக் கொண்டிருப்பதைப்பற்றி சில பந்துக்களுக்குள் எத்தனையோ ஏச்சும்பேச்சும். படிப்புப் போதாதென்று சங்கீத உபாத்தியாயர்கள் இருவர் வந்து எங்களுக்கு வீணையும் பிடிலும் சொல்லிக் கொடுப்பது வழக்கம், "உன் அழகான பெண்களுக்கு சங்கீதம் வேறு வேண்டுமா" என்று என் தாயாரை நேரிலேயே பரிகசிப்பவர்களும் உண்டு. "கிராமங்களிலிருந்து பட்டினத்துக்குவந்து புருஷப்பசங்களைத்தான் படிக்கவைப்பார்கள், இவர்கள் அதிசயமாக பெண்ணைப்படிக்கவைத்திருக்கிறார்கள். இருந்தாலும் பரீக்ஷை தேற வேண்டாமா? புருஷர்களே திண்டாடும்போது இந்தப் பெண்ணுக்கு பரிக்ஷை தேரிவிடுமோ, அதையுந் தான்பார்த்து விடுவோமே?"...இப்படிப்பட்ட பேச்செல்லாம் கேட்டுக் கொண்டிருந்த என்தாயாருக்கும் சித்திக்கும், "இந்தப் பரீக்ஷை தேர வேண்டுமே எத்தனையோ ஏச்சையும் பேச்சையும் கேட்டுக்கொண்டு தைரியமாகப் படிக்க வைத்திருக்கிறோம்—பரீக்ஷையில் தவறினால் நமக்கு தலைதூக்க முடியாத அவமானமல்லவோ ஏற்படும்" என்றெல்லாம் இரவு பகல் இதே ஏக்கமாக இருந்தார்கள்.

1906-ஆம் வருஷம் தைமாதம் சங்கராந்தியன்று காலை நான் பரீக்ஷையில் ஜயமடைந்ததாக அப்பா அவர்களின் சிநேகிதர்கள் அக்கம்பக்கத்தவர்கள் வந்து சொன்னபோது என் தாயாருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை—என் சித்தி அந்த சமயம் என் மாமாவிடம் போயிருந்தார், முதல்நாள் இரவு இதே ஞாபகமாகப் படுத்தவர், நான் பரீக்ஷையில் தவறினதாக சொப்பனம்கண்டு தூக்கத்திலேயே அழுது கண்ணீரால் தலையணை நனைந்துபோய்விட்டதாம். மறுநாள் இந்த சந்தோஷ சமாசாரத்தை கேள்விப்பட்டு என் பெற்றோர்களுக்குமேல் அவரும் என

மர்மாவும் அதிக திருப்தியை யடைந்தார்கள். என் பெரியதகப்பனர் புதல்வர் ஒருவரிடமிருந்து தன் சந்தோஷத்தைத் தெரிவித்து ஒரு தந்தி. இப்படியாக அந்த சங்கராந்தி தினம் சந்தோஷம் பொங்கும் பொங்கலாகவே யிருந்தது.

எழும்பூரில் அந்த வருஷம் பரீக்ஷைக்குப் போனவர்கள் மொத்தம் 12. 11 ஆண்கள் நான் ஒருத்தி பெண். 11 பேரில் ஒரே ஒரு ஆண்பிள்ளை தான் பரீக்ஷையில் தேரியிருந்தான். மற்ற 10 பேரும் தவறிவிட்டார்கள். பெண்ணுகிய நான் தேரினதில் ஒருவித பொருமை. தாங்களே தேர்ச்சி யடையமுடியாத ஒரு பரீக்ஷையில் பெண்ணுகிய நான் தேரமுடியாதென்றும் ஆனல் என் தகப்பனர் பேபர் திருத்தினவர்களுக்கு லஞ்சம் கொடுத்து அதனல்தான் நான் தேர்ச்சி பெற்றேன் என்றும் பேசிக்கொண்டார்கள். இது ஒரு வேடிக்கை—.

"நான் உண்மையான பக்தியுடன் பூஜிக்கும் அம்பிகையின் அனுக்கிரஹத்தினல் நீ பரீக்ஷையில் தேரினய்; இதுடன் என் பொறுப்பு முடிந்துவிட்டது. நான் எடுத்த விருதம் முடிந்துவிட்டது. நீ மெட்ரிகுலேஷன் முடிக்க வேண்டுமென்று மாத்திரம் விரும்பினேன். அது முடிந்தது. என் மனம் நிம்மதி யடைந்தது—இனி நீ சந்தோஷமாக படித்துக்கொண்டு பொழுதை நல்ல விதமாகப் போக்கவேண்டியது. உன்மேல் படிப்பைப் பற்றி எனக்கு கவலையில்லை. நீ படித்தாலும் படிக்காவிட்டாலும் எனக்கு அக்கரையில்லை" என்று என் தாயார் சொன்னர்.

ஆனல், என் தகப்பனருக்கு நான் காலேஜில்சேர்ந்து படிக்கவேண்டும் என்னும் ஆவல் ஏற்பட்டது. அப்போது இன்ஸ்பெக்ட்ரஸாயிருந்த "மிஸ் கார்" என்பவள் என் தகப்பனரைத்தானகவே அழைத்து இந்த ராஜதானியிலேயே நான்தான் மெட்ரிகுலேஷனில் தேரிய முதல் பிராம்மண மாணவியென்றும் என்னை சீமைக்கு மேல்படிப்புக்கு அனுப்ப, தான் ஏற்பாடு செய்வதாயும், வருஷம் 300 பவுன் உபகாரச்சம்பளம் கொடுப்பதாயும் சொன்னளாம். என் தகப்பனர் அது முடியவேமுடியாது என்று சொன்னதுடன், புருஷர்கள் படிக்கும் காலேஜில்கூட என்னைப் படிக்கவைக்கமுடியாது என்ருராம். அப்போது அவள், ஜார்ஜ் டவுனில் உள்ள Presentation Convent College—இல் F. A. வகுப்பு இருப்பதாயும் அங்கு என்னை சேர்க்கும்படியாயும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத்தான் செய்துவிட்டுப்போவதாயும் சொன்னள். அவ்வாறே கான்வெண்டிலுள்ள ஐரோப்பிய கன்னியாஸ்திரீகளிடம் என்னைப்பற்றி சொல்லி என்னைக்கவனித்துப் பார்த்துக்கொள்ளும்படி ஏற்பாடுசெய்துவிட்டு, அவர்கள் அந்த மாதமே வேலையிலிருந்து ரிடயர் ஆகி சீமைக்குப் போனர்கள். வீட்டில் பெரியவர்களும் ஏக மனதாய் என்னை காலேஜில் சேர்த்து விடுவதாகத் தீர்மானித்தனர். ஆனலும் ஆண் பிள்ளைகள் படிக்கும் பிரெஸிடென்ஸி காலேஜுக்கு அனுப்ப இஷ்டப்படவில்லை. ஆகவே ஜனவரி மாதம் 1906 ஆம் வருஷம் ஜார்ஜ் டவுன் மக்லின் தெருவிலுள்ள கான்வெண்டில் என் தகப்பனர் என்னை யழைத்துச் சென்று F. A. ஜூனியர் வகுப்பில் சேர்த்தார்.

வெள்ளிவிழா வெளியீடுகள்

1. தபால் விநோதம் 2. இனிய முரசு 3. ஆண்டவனின் அருள்

மூன்றும் ஒரேசமயத்தில் வாங்குவோர்க்கு ரூ. 3-தான் (ரிஜிஸ்தர். தபாற்செலவு இனம்.) தனித்தனியே வாங்குவோர் ரூ. 1—4—0 வீதம் அனுப்பினல் ரிஜிஸ்தர் போஸ்ட்மூலம் அனுப்புவோம்.

ஸ்ரீமதி எஸ். தர்மாம்பாள்

கண்ணனும் கர்ணனும்

தங்களது "மோகினி" 1500 மைல்களுக்கப்பாலுள்ள டில்லியில் எங்களையெல்லாம் வசீகரித்துவிட்டாள். அவள்தான் எங்களுக்கு பொழுதுபோக்கு "மோகினி" வாரமொருமுறை வந்தால் நமக்கெல்லாம் எவ்வளவோ பொழுதுபோக்காயிருக்கும் என்று என் சிநேகிதைகள் கூறுகிறார்கள். ஏனென்றால் எங்களுக்கு என்று வேறு ஒன்றும் இல்லையல்லவா? கட்டுரை எழுதவேண்டும் என்று எனக்கு ரொம்ப நாளாக ஆசை. நாலைந்து எழுதியும் வைத்திருக்கிறேன். ஒவ்வொன்றாக அனுப்புகிறேன். தகுதியுளதேல் மோகினிக்கு ஏற்றுக்கொள்ளுங்கள்.

'கண்ணன்' என்பது ஒரு மனோரம்யமான தத்துவம். 'கண்ணன் நினைவே கருத்தில் நிறைவு' என்று கொண்டவர்கள் பலர். கண்ணனின் வடிவத்தை எண்ணி எண்ணி இன்பம் அடைந்தவர் பலர். கண்ணனின் விளையாட்டுகளை நினைத்துப் பார்த்துப் பரவசம் அடைந்தவர்கள் பலர். கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துக் கொஞ்சி விளையாடினார்கள். காதலியாகப் பாவித்துக் கருத்தில் ரமித்தார்கள். காதலனாகப் பாவனை செய்து, மனதால் வரித்து, மனதிலேயே மாலை சூடி மனதிலேயே மணம் புரிந்து பேரின்பம் அடைந்தார்கள். வேறு எதுவும் வேண்டாம்; கண்ணன் நினைவே போதும்" என்று தங்கள் நெஞ்சகத்தில் அந்த நினைவைப் பூட்டி வைத்து நிம்மதியடைந்த ஆத்மாக்கள்தான் எத்தனை! கல்லிலும், முள்ளிலும், செடியிலும், கொடியிலும், கண்ணனைத் தேடி, நீலக் கடலிலும், நீலவானத்திலும், நீலங்கண்ட இடங்களிலெல்லாம் கண்ணனின் மேனியைக் கண்டதாக புளகாங்கிதமடைந்து, மெய் சிலிர்த்துப் பாடியும், கண்ணன் தத்துவத்தில் மனம் லயித்துப் போன ஆத்மாக்கள் எத்தனை!

இந்த இன்பமான, புனிதமான, உள்ளம் நிறைந்த உன்னதத் தத்துவத்தில் ஆழ்ந்துவிட்டவர்களின் பக்தி வெறியே, பாரத நாட்டின் கலாசிருஷ்டிக்கும், இலக்கிய சிருஷ்டிக்கும், காவிய உற்பத்திக்கும், ஓவியக்கற்பனைக்கும், காரணமாயிற்று. "கண்ணன் வெறி" ஒரு புதிய சகாப்தத்தையே துவக்கி வைத்தது. கலை வளர்ச்சி, சமய வளர்ச்சி, மொழி வளர்ச்சி, பண்பு வளர்ச்சி, எல்லாவற்றிற்கும் இந்தக் 'கண்ணன் தத்துவம்' ஒரு மந்திரக் கோலாய் நின்றது. கண்ணனின் லீலைகளில் ஈடுபட்ட வைஷ்ணவப் பெரியார்களின் உள்ளங்கள், கண்ணன் பெருமையைப் பாடின. அந்தப் பாடல்கள், தமிழ் மொழியின் சரித்திரத்திலேயே ஒரு புரட்சியை உண்டாக்கின. வற்றிய தடாகமாயிருந்த தமிழ் இலக்கியத்தில், திடீரென்று தெளிந்த ஜலம் நிறைந்தது. ஆங்காங்கு, கவிதைக் கமலங்கள் தோன்றின. திவ்யப்ரபந்தமான நாலாயிரமும், புதுப்புதுவடிவங்களில், புதுப்புது விதங்களில், புதுப்புது அழகுகளுடன் கண்ணன் தத்துவத்தை விளக்கிக் காட்டியதோடு, தமிழ் மொழியின் வளத்தையும் சிறப்பித்துக் காட்டிவிட்டன. ஓவியங்களிலோ, உள்ளக் கற்பனையில் கண்ட கண்ணன் உருவமானது, புதுப்புதுவடிவங்களில் தோன்றி, ஓவியனின் பக்திக் காதலை தணித்ததோடு மட்டுமின்றி, சித்திரக் கலையின்

சிகரத்தையும் எட்டிப்பிடித்தது. 'கண்ணன்வெறி' கொண்ட சிற்பிகள் வார்த்த சிலைகள், சிற்ப சாஸ்திரக் களஞ்சியங்களாய் ஜீவன் ததும்பி நின்றன.

கடைசியாக, கண்ணன் தத்துவமானது, தர்க்கமும், வாதமும், சிக்கலான சித்தாந்தமும் நிறைந்த சாஸ்திரத்துறையில், ஒரு புதிய படிக்கட்டை அமைத்தது. இந்தப் படிக்கட்டு வழியாக இறங்கினல், ஒரு புதிய தத்துவத்தைக் காணலாம். அந்தத்தத்துவம் உண்மையை அறியும் வழிகளை மட்டும் காட்டுவதோடல்லாமல், உண்மையையே காட்டி விடுகிறது. அது சிக்கலானதல்ல; வெறும் சாஸ்திரக் குழப்பமல்ல; சிந்தனையை வாட்டி வருத்தும் ஜாலக் கொள்கையல்ல. அறிவுக்கு மட்டுமின்றி, இதயத்துக்கும் உகந்தது. இந்தப்புதிய படிக்கட்டு வழியாக இறங்கினுல், 'அதைக் காணலாம்' என்று பெரியாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள், பரமஹம்ஸர், விவேகானந்தர், சைதன்யர், பாரதி யாவரும் உலகத்தை அறை கூவி அழைத்தார்கள்.

ஒவ்வொருவர் உள்ளத்திலும், கண்ணன்பால் கொண்ட அன்பு சுடர் விட்டெரிந்தது. ஒவ்வொருவரும், பாரத நாட்டில் ஒரு அன்பு விளக்கை ஏற்றிச் சென்றுர்கள். அன்புணர்வும், அறிவு நிறைவும், கலையார்வமும், கவிதாப்ரேமையும், யாவும், அந்தக் கண்ணன் தத்துவத்தில் உதயமாயின என்று சொல்வது பொருத்தமேயாகும்

கண்ணன் கடவுனின் அவதாரம் என்று கூறுவார்கள். அவன் உலகத்தில் தோன்றியது, "வாழ்க்கை என்றுல் என்ன? வாழ்வது எப்படி?" என்ற கேள்விகளுக்குப் பதில் கூறத்தான். அந்தக் கேள்விகளுக்குப் பதில் ஒரே ஒரு வார்த்தைதான். "வாழ்க்கை என்றுல் என்ன? ...பதில்: "கடமை". வாழ்வது எப்படி?...பதில்: "கடமையைச் செய்வது." வாழ்க்கையின் லட்சியம் என்ன? "செய்யும் கடமையின் பலனைத் துறப்பது". இதுதான் கண்ணன் அளித்த கைகண்ட ஔஷதம். கண்ணன் உலகில் வாழ்ந்த ஒவ்வொரு விநாடியும், அவன் சொன்ன ஒவ்வொரு சொல்லிலும், செய்த ஒவ்வொரு செயலிலும், இந்தத்தத்துவ விளக்கத்தையே கண்டோம்.

மாடுகளை மேய்த்தான். "ஐயோ, கண்ணு! காட்டில் கல்லிலும், முள்ளிலும் கால் கடுக்க நடந்து, நீ ஏண்டா மாடுமேய்க்க வேண்டும்?" என்று சிலர் இரங்கினுர்கள். ஆனல் கண்ணனே, "நான் இடையன்; அது என் கடமை" என்று கூறிச் சிரித்தான். கை கடுக்கத் தயிர் கடைந்து, வெண்ணெய்திரட்டி, கருக்கழியாத பானையில் வைத்துப் போனுள் கோபி. கண்ணனே, பானையைக் குத்தி, உடைத்து, வெண்ணெயை அள்ளி அள்ளி உண்டான். கோபி வந்து கூக்குரலிட்டாள். "ஐயோ, எவ்வளவு சிரமப்பட்டு தயிர் கடைந்தேன்! அவ்வளவையும் பாழாக்கிவிட்டாயே, கண்ணு!" என்று கோபி கூவுகிருள். கண்ணனே முல்லைச் சிரிப்புச் சிரித்து, "நீ திரட்டிய வெண்ணெய்யை நீயே உண்ண ஆசைப்படலாமா? அதை எனக்கல்லவா கொடுத்துவிடவேண்டும்! திரட்டுவதுதானே உன்

வேலே!" என்று கேலி செய்கிறான். உடனே கோபி, கடுத்த முகம் கனிந்து, கண்ணனைக் கட்டி அணைத்துக் கொள்ள ஓடிவருகிறாள். இந்தக் கேலி மொழிகளில், கண்ணனின் சஞ்ஜீவமந்திரமாகிய சர்வ கர்மபலத்யாகத்தைக் காண்கிறோம்.

கண்ணன் வாழ்க்கை முழுவதுமே விளையாட்டுதான். ஒவ்வொரு விளையாட்டிலும், வினையை ஓட்ட ஒரு தந்திரம். பிறவிப் பிணியைப்போக்க ஒரு மூலிகை. ஜன்மம் சாபல்யமடைய ஒரு மார்க்கம். இப்படியாகவே உபதேசம் செய்து கொண்டுபோனான் கிருஷ்ணன். குழலை ஊதினான். அந்த ஒலி கேட்டு உள்ளங்கள் ஓடிவந்தன. ஓடிவந்த உள்ளங்களின் வாழ்க்கைப் பொறுப்பைத் தான் ஏற்றுக்கொண்டான். ஜீவாத்மாவின் உள்ளத்தில் பரமாத்மாவை அடைய ஒரு வேட்கையைஉண்டாக்கிற்றும் வேணுகானம். குழல் பற்பல விதமாக இசைமாரி பொழிந்திருக்கலாம். அந்த ஒலிக்கு, ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமாகப் பொருள் கொண்டு இன்பம் அடைந்திருக்கலாம். ஆனால் அந்தக் குழல் ஓயாமல் ஊதி ஊதி அளித்த மொழிகள் இவைதான்: "கடமையைச் செய், பலனைத் துறந்திடு; என்னை. நாடு" என்பதுதான் கண்ணன் குழல் ஒலி. இந்த குழலோசையை, அந்த கீதையின் மொழிகளில் கேட்டோம். அந்தக் கீதையின்மொழிகளை இந்தக் குழலோசையில் கேட்டோம். இந்த உபதேசத்தைத்தான், பலர், பற்பலவிதமாக, மொழி விளக்குகள் ஏற்றிவைத்து, தமிழக மெங்கும் ஜ்வலிக்கச் செய்தார்கள்.

"தீமை ஒழியவும், நன்மை உய்யவும், யுகந்தோறும் யுகந்தோறும் இகந்தனில் தோன்றுவேன்" என்பது கண்ணனின் அபய வாக்கு. ஸ்ரீ கிருஷ்ணனின் அவதார ரகஸ்யம் என்று ஆசார்ய புருஷர்கள் குறிப்பிடுவதும் இதைத்தான். ப்ருந்தாவனத்தில், குழலை ஊதி ஊதி இந்தக் கடமை நெறியைக் கருத்தில் பதியவைத்த வேணுகோபாலன், போர்க்களத்தில், பார்த்தஸாரதியாக வந்து, அர்ஜுனனுக்கு மொழிகள்மூலம், அந்நெறியை எடுத்துச் சொன்னான். கண்ணன் காட்டிய அந்த மார்க்கம்தான் கடமைகாட்டிய வழி. உழைக்கும் வழியை அதில் காணலாம். வினை ஆளும் விதத்தை அதில் காணலாம். 'பயன் உண்ணும் முறையை. அதில் காணலாம் "இன்பம் எது? துன்பம் எது?" என்று, வேறுபிரித்து, ஜாபிதா போடாமல், இரண்டையும் கடந்த சாந்தி நிலையைக் கண்ணன் காட்டி, "கடமையின் பலனைத் துறப்பதுதான் அந்த சாந்திநிலை" என்பதையும் உணர்த்திவிட்டான்.

கோகுலாஷ்டமியன்று நமது மனதைக் கவருபவை நான்கு. வாசற்படியிலிருந்து பூஜை அறை வரையில் மாக்கோலமிட்ட சின்னஞ் சிறடிகள். அடுத்தது, கோகுலாஷ்டமிக்கே பிரத்யேகமான முறுக்கும் சீடையும். மூன்றாவது, கண்ணன் மேனியை நினைவூட்டும் கருநாவற்பழம். நான்காவது பூஜையில் வைத்திருக்கும் பகவத் கீதை. குழந்தை கண்ணன், ஒவ்வொரு கிருஹத்திலும், வாசற் படியேறி, சின்னஞ் சிறடிகள் பதிய நடந்துவந்து, வெண்ணெய் உண்டு நாவற்பழம் சுவைத்து, முறுக்கு மென்று, சீடைகடித்து, மனத்ருப்தியுடன் "இதுதான் உங்கள் கடமை" என்று முல்லைச்சிரிப்பால்

உணர்த்தி தனது அழகிய சிறுவிரலால், பகவத்கீதையைச் சுட்டிக் காட்டிவிட்டு, குதித்தோடி மறைகிறான்.

கலியுகத்தில், கடவுளைக் கண்ணால் காணவில்லை என்று கூற லாகாது. நாம் அறிந்த, உணர்ந்த தெய்வம், கடமைதான். கடமையைச் செய்வதும, பலனைத் துறப்பதுந்தான் அந்த கடவுளுக்கான வழிபாடு. கடமை நெறியை கண்ணன் உபதேசித்தபோது அதை பாரதநாட்டு மக்களுக்கு மட்டும் ஏகபோகமாக்கவில்லை. அந்த நெறியை அகில உலகத்திற்குமே பட்டசாஸனம் செய்து வைத்தான். கடமையைச் சரிவரச்செய்து, அதன் பலனை முழுமையும் துறப்பது என்றால், அந்தச் செய்கையில், வாய்மை, தூய்மை, பண்பு, தியாகம்—சகலமும் அடங்கியாகவேண்டும் அல்லவா!

கண்ணன் பாரத நாட்டின் செல்லக் குழந்தை. பாரத நாட்டின் சிறந்த சேவகன். பாரத நாட்டின் ஸௌந்தர்ய தத்துவம். பாரத நாட்டின் ஸத்குரு.

கண்ணன் வாயால் சொல்லிப்போன வாழ்க்கை நெறியை, கர்ணன் தன் வாழ்க்கையிலேயே அனுசரித்துக் காட்டிவிட்டான். கண்ணன் வாய்மொழிக்கு வியாக்யானமாக விளங்கிற்று கர்ணன் வாழ்க்கை.

அறநெறியும் மறநெறியும்தான் சுத்த வீரனின் லட்சணங்கள். நன்மை வளர்ப்பது, தீமை ஒழிப்பது, வாய்மை வழி நிற்பது பொய்மை விரட்டுவது, இவைகளே வீரத்தின் இலக்கணம். நாட்டைக் காப்பது, நாட்டு மக்களைக் காப்பது, தன் வீரத்தையும் காப்பது, இவைகளே வீரத்தின் கடமைகள். அபாயங்கள் வெருட்டலாம். துன்பங்கள் சஞ்சலம் உண்டாக்கலாம். அபவாதங்கள் அவன் கௌரவத்தையே குலைத்துவிடப்பார்க்கலாம். ஆயினும் இவைகளை எல்லாம் பொருட்படுத்தாமல், தன் கடமையே கண்ணாக நிற்பவன்தான் சுத்தவீரன். வீரன்வழி தியாகவழி. நெறி தியாக நெறி. சுத்தவீரம் என்றால் இதுதான் என்று நிரூபித்துக் காட்டினான் கர்ணன்.

நன்றியறிதல் என்ற பண்புக்கே இலக்கணம்; கடமையின் அடிமை; இவைதான் கர்ணன். தர்மமார்க்கத்தில் தளராமல் செல்வதில் தருமபுத்திரரையே அவன் மிஞ்சிவிட்டான்.

மஹாபாரதத்தில் கர்ணனைப் போல் துரதிஷ்டசாலியே கிடையாது. பிறந்தவுடன் அன்னை கை விட்டாள். வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் அவனுக்கு ஒரு கஷ்டம். ஒவ்வொரு அடியிலும் சறுக்கல். பிறந்தவுடன் தலைமேல் பெரிய அபவாதம். தன் உடலில் ஓடிய இரத்தம் உயர்ந்தது என்பது அவனுக்கே தெரியாது. அதன் காரணமாக அவன் எத்தனை முறை அவமானப்பட்டிருப்பான்! குலச் சிறுமை என்னும் திரை, அவன் வாழ்க்கையின் மேன்மையையே மூடிவிட்டது. அந்த அபவாதம் அவன் உடலில் மற்றொரு உயிராகவே ஊன்றிப்போய், அவனுடைய உயிர் போகும் போதுதான் அவனைத் துறந்துசென்றது.

விதி, கர்ணனை துன்பத்துறையாகப் பார்த்து இறக்கிவிட்டது. கடமையையே படகாகக் கொண்டு, கொடைமடமே துடுப்பாகக்

கொண்டு, சம்சாரசாகரத்தைக் கடக்க முயன்றான் கர்ணன். ஆனால், அந்தப்படகே அவனைப் பலமுறை கவிழ்க்க முயன்றது. அந்தத் துடுப்பே, அவன் கையிலிருந்து பன்முறை நழுவியது. கர்ணனுடன் கருணையும் பிறந்தது. ஆனால் அவனுடைய கொடைக் குணமே அவன் உயிருக்கு உலை வைத்தது. அப்படியும் அவன் மனம் தளரவில்லை. தான் உயிர்வாழ்வதற்கோ தான் சுகப்படுவதற்காகவோ, அவன் தர்மத்தைக், கைவிட்டானா? இல்லை. கவசகுண்டலங்களை இந்திரன் யாசகம் வாங்கிப்போனான். நாகபாசத்தை இரண்டாம் முறை பிரயோகம் செய்யாதே என்று தாய் வாக்குறுதி பெற்றுப் போனாள். தர்மதேவதை துணைசெய்வதைத் தடுக்க, தர்மத்தின் பலனை தானம் வாங்கிப் போனான் கண்ணன். இதைவிட கர்ணன் வேறு சிறந்த தியாகம் என்ன செய்ய முடியும்? அவனுடைய வாழ்க்கையின் லட்சியம், அவன் போர்க்களத்தில், தான் செய்திருந்த தானதர்மங்களின் பலனைத் தியாகம் செய்தவுடனேயே, கைகூடிப்போயிற்று. தான் கடைபிடித்த கடமைநெறியே சிறந்தது என்று பிடிவாதமாய் நின்ற கர்ணன் மகாத்மா என்பதில் என்ன சந்தேகம்?

வாழ்க்கை ஆரம்பமானபோதே, கர்ணனுக்குச் சோதனையும் துவங்கிற்று. துன்பத்தைக் கண்டு அவன் அஞ்சவில்லை. “மனதை அடக்குபவன்தான் மனிதன். மனச் சாட்சிக்கு அடங்குபவனே மனிதன்” என்ற துணிபு கொண்டான். ‘வில்வித்தை பலிக்காமற் போகட்டும்’ என்று பரசுராமர் சபித்தார். அரங்கேற்று மண்டபத்தில் அர்ஜுனன் இகழ்ந்து பேசினான்.

பாரதயுத்தம் துவங்குவதற்குமுன் அவனுக்கு எத்தனை பேர் ஆசைகாட்டினார்கள். குந்தி வந்தாள். “நானே உன் அன்னை” என்றாள். “தாயே! ரொம்பசந்தோஷம். ஆனால் அன்னையின் கடமை, மைந்தனுக்கு அபகீர்த்தி நேராவண்ணம் பாதுகாப்பது. ஆகவே என்னை செய்நன்றி கொல்லும் பாதகனுக்க நீ முயற்சித்தால், நீ என் தாய் ஆகமாட்டாய்” என்று கூறிவிட்டான் கர்ணன். பிறகு கண்ணன் வந்தார். “கர்ணா! பாண்டவரோடு உறவு கொள். மகா மண்டலேச்வரனாகலாம்” என்றார். “தர்மவழி சென்று உயிர் துறப்பேனே ஒழிய அதர்மவழி சென்று அரச பதவி அடையமாட்டேன்.” என்று கர்ணன் கூறிவிட்டான்.

“அம்மா! நீ எனக்கு செல்வம் தந்தாலும் சரி; பதவி கொடுத்தாலும் சரி; உன் அன்பை அளித்தாலும் சரி, இவையெல்லாம் எனக்கு அவ்வளவு அருமையல்ல. எனக்கு மிகவும் அருமையானது; செய்நன்றியறிதல் என்ற அந்த சிறந்த பண்புதான். வேறு எந்த அபவாதத்தையும் நான் சுமக்கத் தயார். எந்த அவமானத்தையும் சகிக்கத் தயார். எப்பேர்ப்பட்ட ஆபத்தையும் சந்திக்கத் தயார். ஆனால் நன்றி மறக்கமாட்டேன். “கொலை செய்வதைவிடக் கொடிய பாபம் அது” என்று கர்ணன் குந்தியிடம் கூறிய மொழிகள் தர்மத்தின் இலக்கணமாக நிலைத்துவிட்டன.

மஹாபாரத்தில் சிகரம்போல் விளங்குவது கீதை. அது கடமையின் கலை. கண்ணன் கூறியபிறகுதான் அர்ஜுனன், கடமை

யின் அருமையை உணர்த்தான். ஆனால் கர்ணனோ, அதை முன்பே அனுசரித்துக் காட்டிவிட்டான்.

"ஐயோ! உங்களைப்பார்த்தால், வெற்றியை நாடிப் போருக்குப் போகும் சுத்த வீரரைப் போலவா இருக்கிறது? சகலமும் துறந்து சாந்தியை நாடிச்செல்லும் மகாத்மாவைப்போலல்லவா இருக்கிறது" என்று பதினாறாவது நாள் கர்ணன் போருக்குப் புறப்படும்போது, அவன் மனைவி கூறிக் கதறினாள்.

"கர்ணா! துன்பமும் இன்பமும் சந்திக்கும் இடம், சந்திக்கும் விந்தை, சந்திக்கும் அபூர்வநிலை, உன் வாழ்க்கைதான்" என்று சல்யன் கூறிப் பெருமூச்சு விட்டான்.

"உணவளித்தவர் கையில் உயிரை ஒப்படைத்தேன்; வாள் கொடுத்தவர் கையில் வாழ்வினைத் தந்தேன்; உண்டகடனைத் தீர்க்கப் போகிறேன்; முடிவானகடமையை நிறைவேற்றப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே கர்ணன் யுத்தகளம் புறப்பட்டான்.

பதினாறும் நாள் யுத்தத்தில் கர்ணன் சேனாதிபதியாகச் சென்றான். அன்று விடியற்காலம்; அவன் மனோநிலை எவ்வாறு இருந்திருக்கும்? எந்தெந்த எண்ணங்கள், என்னென்ன வேதனைகள், அவனை வாட்டியிருக்கும்? வெற்றி தனக்கில்லை என்று நிச்சயமாகத் தெரியும். கவசகுண்டலதானம், நாகாஸ்திரப் பிரயோகக் கட்டுப்பாடு, இரண்டும் தனக்கு யமன்கள் என்று தெரியும். எதிர்ப்பவர்கள் சகோதரர்கள். போராடுவதோ செஞ்சோற்றுக் கடன் தீர்க்க. வீரத்திற்கு இழுக்கு வராமல், தீரத்துடன் போர் புரிந்தாக வேண்டும். கடும்போர் ஆற்ற வேண்டும். ஆனால் வெற்றி கிடையாது. இவ்வளவையும் முன்கூட்டியே அறிந்து, யுத்தற்திற்குப் புறப்படுவதென்றால், அது, தியாகஉணர்வு நிறைந்த மனதிற்குதான் சாத்யம்.

ஆயினும், கர்ணன் தியாகத்திற்கும் கைம்மாறு கிடைத்துவிட்டது. போராகிய கடமையைச் செய்தான். வெற்றியாகிய பலனைத்துறந்தான். கைம்மாறு ஆத்ம சாந்தி. குல மாசு நீங்கிற்று. பாண்டவரும் கௌரவருமாகக்கூடி, அவன் மரணத்திற்காகக் கதறி அழுத ஒலியும், கண்ணீர் வெள்ளமும்தான் முடிவில் அவன் பெற்ற பேறாய் இருந்தன.

கண்ணனின் கடைசீ லீலை, கண்ணனின் வாழ்க்கை—கோகுலத்தில் குழலோசையில் ஒலிக்க ஆரம்பித்த கடமை மந்திரம், கர்ணன் வாழ்க்கையின் இறுதியில் வந்து பலிதமாயிற்று.

கர்ணன் மரணத்தை, சஞ்ஜயன் கூறக்கேட்ட திருதராஷ்டிரன் கூறுகிறான் :—

சஞ்ஜயா! உலகத்தில் நம்மிருவரைப்போல் கொடுத்துவைத்தவர்கள் இல்லை. ஒரு கர்மவீரனின் வாழ்க்கையை ஆதிமுதல் அந்தம் வரை கண்ட நாம் கொடுத்துவைத்தவர்கள்தான்."

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்

ஸ்ரீ காஞ்சீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசாரியர்

உரையுடன் உயரிய பதிப்பு ரூ. 1.

ரிஜிஸ்தர் தபாலில் 1—4—0.

நான் கண்ட தேசிய வெள்ளம்

★

8. கூண்டோடு கைலாசமா?

★

ம.பொ.சி

'கூண்டோடு கைலாசம் போகமுடியுமா?' என்று பக்தர்கள் ஒரு சமயம் விவகரித்தார்களாம். அதாவது, 'இந்த உடலோடு கைலாசம் போகமுடியுமா?' என்பதுதான் அவர்களைக் கலக்கிய பிரசினை. பின்னுளிலோ, நாஸ்திக வாதிகளும் சந்தேக வாதிகளும், 'கைலாசம் ஏன் போகவேண்டும்? அந்த வெள்ளிப்பனி மலையில் கத்தரிக்காய் உண்டாகுமா? நெல் பயிராகுமா?' என்று பரிகசிக்கிறார்கள். 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்ற கொள்கையுள்ளவர்களுக்குக் கூண்டே கைலாசம்தான்!

பிரிட்டிஷ் ராஜபக்தர்களிலும் சிலர், 'பிரிட்டிஷ் ஆட்சிக் கூண்டே கைலாசம்' என்று பிரசாரம் செய்திருக்கிறார்கள். வேறு சில ராஜபக்தர்கள், 'இந்தக் கூண்டு கைலாசமாக இல்லைதான்; எனினும் இதற்கு வெள்ளி முலாம்பூசிக் கைலாசம்போல் செய்துகொள்ளலாம்' என்று சொன்னார்கள். இன்னும் சில ராஜ பக்தர்களோ, 'இந்த ஆட்சிக் கூண்டுடன்தானே சுதந்திர கைலாசத்தில் பிரவேசம் செய்யவும் கூடும்' என்றார்கள்.

மூவகைப் பக்தி

பக்தியில் சாதாரணபக்தி, தீவிரபக்தி, அதிதீவிரபக்தி என்ற தரங்கள் உண்டு. 'கூண்டோடு கைலாசம் போகமுடியுமா?' என்பது போன்ற விவகாரங்களெல்லாம் மிகத் தாழ்ந்த படியிலுள்ள பக்தர்களின் சாதாரண நிலைதான்.

தீவிரபக்தியோ.

எவ்வுயிரும் பராபரன்சன் னிதிய தாகும்;
இலங்குமஉயிர் உடல்அனைத்தும் ஈசன்கோயில்

என்றவாறு உடம்பை ஈசனுக்குரிய கோயிலாக்கிக் கொள்கிறது.

அதிதீவிரபக்தியோ,

அன்றே, அப்போ தேவீடு, அதுவே வீடு வீடாமே!

என்றவாறு விடுதலை காண்கிறது.

பயபக்தியாகிய ராஜபக்தியிலும், சாதாரண பயபக்தி, தீவிர பயபக்தி, அதிதீவிர பயபக்தியென்ற தரங்கள் உண்டு. சாதாரண பயபக்தர்களே, பிரிட்டிஷ் ஆட்சிக் கூண்டுடன் சுதந்திர கைலாசப் பிரவேசம் செய்யமுடியுமென்று பிரசாரம் செய்தவர்கள். தீவிர பய

பக்தர்களோ, 'சுதந்திர கைலாசப் பிரவேசம் என்று ஒன்றுமே நடக்காது. பிரிட்டிஷார் கருணை கூர்ந்தே தங்கள் ஆட்சிக்கூண்டைச் செப்பனிட்டுக் கொடுப்பார்கள். அதையே கைலாச மென்று சொல்லிக் கொண்டால் போகிறது!' என்றார்கள். அப்படிச் சொல்லவும் பயந்த அதிதீவிர ராஜபக்தர்கள், 'வேறு கைலாசமே கிடையாதப்பா, இந்தக் கூண்டு தவிர!' என்று திடுக்கிட்ட நெஞ்சுடன் பேசினார்கள்.

பிரேம பக்தியாகிய தேசபக்தியிலும், சாதாரணம், தீவிரம், அதிதீவிரம் என்ற தரங்கள் உண்டு. சாதாரண தேசபக்தர்கள், விண்ணப்பங்களாலும் பிரார்த்தனைகளாலும் கண்டனங்களாலும் அரசியல் சீர்திருத்தங்களை அடையக்கூடும், நாளடைவில் பிரிட்டிஷ் ஆதரவிலும் அணைப்பிலும் குடியேற்ற நாட்டின் அந்தஸ்தைப் பெறவும் கூடும் என்று நம்பினார்கள். தீவிர தேசபக்தர்களோ பெருங்கிளர்ச்சி செய்து, 'தன்கையே தனக்கு உதவி' யென்ற ரீதியில் குடியேற்ற நாட்டின் அந்தஸ்தை அடைய வேண்டும், அல்லது சுதந்திரத்தை அடைய வேண்டும் என்றார்கள். அதிதீவிர தேசபக்தர்களோ, 'கூண்டே கைலாசம்' என்ற ராஜபக்திக் கொள்கையை அடியோடு மறுத்து, 'சுதந்திர கைலாசம் கூண்டுக்கு வேளியேதான். இந்தக் கூண்டைக் கலைத்துவிடுவதே அல்லது தகர்த்தெறிவதே சுதந்திரக் காற்றுவெளியில் சுவாசிப்பதற்கு உபாயம்' என்றார்கள்.

மிதவாதிகளும் ராஜபக்தர்களும்

சாதாரண தேசபக்தர்கள், தீவிர தேசபக்தர்களை 'அமிதவாதிகள்' என்றார்கள்; அதிதீவிர தேசபக்தர்களைப் 'புரட்சிக்காரர்கள்' என்றும் சொன்னார்கள். தங்களை 'நிதானஸ்தர்கள்' என்றும், 'மிதவாதிகள்' என்றும் சொல்லிக் கொண்டார்கள். இவர்களில் சிலர், ராஜபக்தி தேசபக்தியென்ற இரு தோணிகளிலும் கால்வைக்க முயன்று, 'ஐயோ! கடலில் விழுந்து விடுவோமோ?' என்று நாளடைவில் காங்கிரஸை விட்டுப் பிரிந்து போய்விட்டார்கள். இவர்களில் சிலர், 'நீண்ட காலமாகப் பிரிட்டிஷ்காரர் நமக்காக உருவாக்கி வந்திருக்கும் ஆட்சிமுறை நமக்கு அவ்வளவு நல்லதாக இல்லாவிட்டாலும், மிகவும் திறமைவாய்ந்தது' என்று சொன்னார்கள். மனப்பூர்வமாக நம்பிச்சொன்னவர்களும் உண்டு.

பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பயந்தார்களோ அல்லது அதைவிட்டு வெளியேறப் பயந்தார்களோ, எப்படியானாலும் ராஜபக்தர்கள் பெரும்பாலும் பயபக்தர்களே. மிதவாதிகளைக்குறித்து இப்படிச் சொல்லிவிடமுடியாது. தீவிர—அதிதீவிர ராஜபக்தர்கள் தங்கள் பயத்தை வெளிக்காட்டாமல், 'பிரிட்டிஷ் ஆட்சிக் கூண்டே அழகானது; சுதந்திரச் சொர்க்கமும் இதற்கு நிகராகாது!' என்று அடிமை-மோகத்தை வெளியிட்டு அரசாங்கத்தையும் தேசத்தையும் தங்களையுங்கூட ஏமாற்றிக் கொண்டதுண்டு. ஆனால் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், கோபாலகிருஷ்ண கோகலே, ஸர். பிரோஸ்ஷா மேத்தா முதலான பிரமுகர்களைப் பயப்பிராந்தர்களென்றோ, ஏமாற்றுகிறவர்களென்றோ சொல்லமுடியுமா?

நிதான தேசபக்தர்கள்.

1895-ல் ஸர். பிரோஸ்ஷா. எம். மேத்தா, கே. ஸி. ஐ. இ. பேசிய பேச்சை இன்று படித்துப் பார்த்தாலும், அவரை உண்மையான தேசபக்தரென்றுதான் சொல்லத் தோன்றுகிறது. அந்த மிதவாத மனப்பான்மை நமக்குப் பிடிக்காமலிருக்கலாம்; எனினும் அவரைப் பயந்தவரென்றோ, உண்மையில்லாதவரென்றோ சொல்ல முடியாது.

நமது மாகாணத்தவரான ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயரை ஒரு சிறந்த மிதவாதப் பிரமுகர் என்று சொல்லலாம். தாம் கொண்ட கொள்கைகளை விட்டுக் கொடுக்காத மன உறுதி வாய்ந்தவர்; தம் கொள்கைகளுக்கிணங்க இயன்றவரை நாட்டுத் தொண்டு ஆற்றியவர். மகாகனம். வி. எஸ். ஸ்ரீநிவாஸசாஸ்திரியாரோ ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயரைக் காட்டிலும் தேசத் தொண்டாற்றியவர்; நாட்டுக்காகவே தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர். இவர்களெல்லாம் திலகரைப்போல், விபினசந்திர பாலரைப்போல், அரவிந்த கோஷைப்போல் தீவிர தேசபக்தர்களல்ல; எனினும் உண்மையான தேசபக்தர்களேயாவர்.

மிதவாதிகளில் கோகலேயையும் சாஸ்திரியாரையும் தலைசிறந்தவர்களென்று சொல்லலாம். பீனல் கோடு—ராஜநிந்தனைக் குற்றத்தைக் குறிக்கும் ஸெக்ஷனுக்காவது, அதிலுள்ள தண்டனைக்காவது இவர்கள் அஞ்சினர்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் அத்தகைய தியாகங்களில் இவர்களுக்கு நம்பிக்கை கிடையாது.

பரிபூர்ண சுதந்திரத்தைக் குறித்துத் தீவிர தேச பக்தர்கள் காங்கரஸில் பேசிக்கொண்டிருக்கும்போது, சாஸ்திரியார் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய லட்சியங்களை உத்ஸாகமாய்ப் புகழ்ந்து கொண்டிருந்தார். சாஸ்திரியாரின் சீடர்களோ அதிகார தேவதைகளை வழிபட்டுக்கொண்டே நாட்டுப்பணி செய்யக்கூடும் என்று நம்பினர்கள்.

விடியா மூஞ்சிகள்

மிதவாதிகள் நாட்டுக்கு அவ்வளவு கெடுதி செய்யவில்லை. தீவிர தேசபக்தர்களின் பெரு முயற்சிகளை மிதவாதிகள் கண்டித்ததுகூட நாட்டில் அதிகமான சோர்வை உண்டாக்கிவிடவில்லை. மகாகனம் சாஸ்திரியாரைப் போன்றவர்களின் தன்னல மறப்பும், குணுதிசயமும், அறிவுத் திறமையும் ஓரளவு நாட்டுக்கு நன்மையாகவும் இருந்தன. எனினும், இந்த மிதவாதப் பிரமுகர்களோடு சேர்ந்து தீவிர தேசபக்தர்களைக் கண்டித்த ராஜபக்தர்–கூட்டம், தேசத்துரோகம் செய்து, தீவிர இயக்கங்களில் வெற்றியை ஒருவாறு தடைப்படுத்தவோ, தாமதப்படுத்தவோ உதவின என்பதில் சந்தேகமே இல்லை. அதனுல்தான் இன்றைய சுதந்திர இந்தியாவிலும், 'தங்கமானகூடு; உறுதியான கூடு: வெளியே வந்து விட்டோம். என்ன என்ன ஆபத்தோ?' என்றபயப்பிராந்தியை இன்றும் காணலாம் சில 'விடியாமூஞ்சி'களில்.

* * * *

காட்டிலே க்ஷேமமாயிருந்த கிளியையும் குயிலையும் குறித்து ஒரு கதை எழுதியிருக்கிறார் ஓர் அறிஞர். ஒரு நாள் கிளியை வேடன் பிடித்து ஒரு செல்வனுக்கு விற்றுவிட்டான். செல்வன் செல்வமாக வளர்த்து வருகிறான், கிளியைத் தங்கக் கூட்டிலே வைத்து. நாளடைவில் காட்டு வாழ்வு மறந்து போகிறது, கூட்டு வாழ்வு பழகிப் போகிறது.

குயிலோ கிளி-நண்பனைத் தேடிவந்து கூட்டுக்கு அருகேயுள்ள ஒரு மாமரத்தில் உட்காருகிறது. கூண்டு திறந்திருந்தும், கிளிக்கு இஷ்டமில்லையாம், அகண்ட நீல வானத்திலே பறந்துபோக. தங்கக் கூண்டைக் காட்டுகிறதாம் கிளி குயில்-நண்பனுக்கு. இதுதான் இந்நாட்டுப் பிற்போக்காளர்களின் நிலை. சுதேச ராஜக்களின் மனநிலையும் இப்படி யிருந்து இப்போது மாறிவிட்டது.

எப்படியும் கூண்டுக்கு வெளியே வந்துவிட்டோம்; ஆனால் கூண்டுப் பழக்கம் போக வேண்டுமே!

என்ன படிக்கிறீர்கள்?

"அடாடா! என்ன ஸ்வாரஸ்யமாய்ப்படிக்கிறீர்கள்? இரண்டு பேரும் மெய்மறந்து உட்கார்ந்திருக்கிறீர்களே ; என்னபுத்தகம்?" என்றாள் சூடாமணி...

ருக்மிணி:—வாம்மா வா!...இந்தபுத்தகத்தின் ஆனந்தத்தில் நான் மெய்மறந்துதான் போய்விட்டேன். ஸ்ரீசுத்தானந்தபாரதியார் எழுதிய நடனாஞ்சலி என்கிற அத்புதகாவியத்தைப்படிக்கிறேன்.

நவரஸ நடனாஞ்சலி ரூ—2.
புதுயுகநிலையம் புதுச்சேரி

அடாடா! அதன் அத்புத உணர்ச்சியைச் சொல்லி முடியவில்லை. படிக்கும்போதே அந்த பாடல்களின் ஸாஹித்யங்கள் அர்த்த பாவத்துடன் நாட்டியமே கண்ணெதிரில் பார்ப்பதுபோல் அத்தனை உணர்ச்சியுடன் இருக்கின்றன. அதனால்தான் நேரம்போவதே தெரியவில்லை. ஒவ்வொருபாட்டையும் நானே பலமுறைபடித்த வ்ாறு மானஸீகமாய் நாட்டியத்தைப் பார்த்து இன்புறுகிறேன். நாமும் எத்தனையோ பரதநாட்டியங்களைப் பார்க்கிறோம். நாட்டியத்திற்கு விருவிருப்பான பாவமே இல்லாத பாட்டுக்களை சிலர் நாட்டியமாடி ஏதோ சப்தஜாலங்களைச் செய்து கடுபுடி செய்கிறார்கள். நாட்டியமென்றால் அதில் முக்யமான கருத்தையும் காட்சியையும் கொண்ட ஸாஹித்யமாகவல்லவா இருக்கவேண்டும். ஏதோமெட்டுக்காகவும், தாளக்கட்டிற்காகவும் சில பாட்டுக்களை நாட்டியமாடுவதை விட்டுவிட்டு, இந்த நடனாஞ்சலியிலுள்ள அருமையான பாடல்களைப்பாடி அபிநயம் பிடித்தால் எத்தனை அருமையாக இருக்கும் என்று எண்ணியபடியே படிக்கிறேன். இந்தா நீ படித்துப் பார்த்து இதை ஒவ்வொரு நாட்டிய கலாமந்திரத்திலும் வைத்து உபயோகப்படும்படிச்செய்....

சூடாமணி:—வாஸ்தவம். யோகியாரின் பாடல்களே ஒரு தனி ஜீவசக்திநிறைந்த அம்ருததாரையைப்போல் உள்ளத்தில் பதிகின்றன. யோகியார் விடும் மூச்சுக்களும் காவிய மலராகப் பூத்து

உலகிற்கு உபகாரம் செய்கின்றன. இதுவும் நம் தமிழ்நாடு செய்த பாக்யந்தான்... அதென்ன புத்தகம் இந்திரா...

இந்திரா:—இதுவா...தாய்மையும் குழந்தைவளர்ப்பும் என்ற பெயரில் ஸ்ரீமதி பார்வதி ஸ்ரீநிவாஸன் எழுதியிருக்கிறரே அந்த புத்தகம்.

சாதாஅட்டை விலை - ரூ.3. காலிகோபைண்டு ரூ. 4-8.
'கோகுலம்', மயிலாப்பூர், (சென்னை. 4.)

ஓகோ! மந்திரி ராஜன் முகவுரை எழுதியிருக்கிறரே அது தானே. நேற்றுத்தான் நான் படித்து முடித்தேன். மிக உபயோகமான புத்தகம். படிக்கப் படிக்க உள்ளத்தைக் கவரும்படியான விருவிருப்பும் கவர்ச்சியும் நிரம்பி இருக்கிறது. இம்மாதிரியான முக்யவிஷயங்கள் இப்படி சாதாரணமாகப் படித்தால் மட்டும் போதாது. இதை ஒவ்வொரு பள்ளிக்கூட மாணவிகளுக்கும் உபாத்தியாயினி போதிக்கும்படிச் செய்யவேண்டும். சங்கங்கள் தோறும் பெண்மணிகள் வாங்கிப்படித்து அதில் கூறப்பட்டுள்ள அதி முக்யமான விஷயங்களை க்ரகித்து தம் தம் வாழ்க்கையில் பயன் படுத்திக்கொள்ளவேண்டும்.

இந்திரா:—இப்புத்தகத்தில் இன்னொரு ஆச்சரியம் பார்த்தாயா! நாகரிகத்தைப் போதிக்கும் முறையில் பழமையை அலக்ஷியம் செய்யவில்லை. உதாசீனம் செய்து குறைகள் கூறவில்லை. கூடுமான வரையில் பழமைக்கு ஆதரவும் கொடுக்கப்பட்டிருப்பதைப் போற்ற வேண்டும். சிலர் புதுமையை உயர்த்துவதற்காக பழமையை அடியோடு மட்டந்தட்டுகிறார்கள். இவ்வாசிரியை அந்த முறையிலும் நல்லவெற்றி பெற்றிருக்கிறர். இதுபோன்ற பெண்களுக்கான முக்ய விஷயங்களை இன்னும் எழுதி வெளியிடவேண்டும்படியான சக்தியை ஆசிரியைக்குக் கொடுக்க இறைவனை வேண்டுகிறேன்.

— வை. மு. கோ.

ஸ்ரீ. எஸ். கணேசன்

விபரீத விஜயம்

ஒரு நாளுமில்லாமல் அன்று மாடியில் போய் உட்கார்ந்து கொண்டேன். கீழே குடித்தனமிருக்கிற எனக்கு மாடியில் என்ன வைத்திருக்கிறது? போறுதகாலம்தான். கீழே நானும் என்தாயாரும் குடியிருக்கிறேம். மாடியில் ஒரு ரிடயர்டு ஆபீஸரும் அவர் மனைவியும் அவர்களுடைய ஒரேபெண்ணும் குடியிருக்கிறர்கள். அந்தப்பெண் காலேஜ் ஸ்டுடெண்ட். என்தாயாரும் மாடியில் குடியிருப்பவர்களும் அன்று மூன்றுமணி ஆட்டம் சினிமாவுக்குச் சென்றிருந்தார்கள். அதான் கொஞ்சம் காத்தாட மாடியில் உட்கார்ந்துவிட்டு வருவோம் என்று எண்ணி மேலே போய் வராண்டாவில உட்கார்ந்தேன்.

சுமார் நாலரைமணியிருக்கும். யாரோ ஒரு ஆள் அங்குமிங்கும் திருடன்மாதிரி விழித்துக்கொண்டே மாடிக்குவந்து சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு.

"வீஜயம் யாரு, ஸார்?" என்று மெதுவாகக் கேட்டான்.

"நான்தான் விஜயம். என்னப்பா வேணும் உனக்கு?"

"நீங்க இங்கேதான் குடியிருக்கீங்களா ஸார்?"

"ஆமாம். என்ன சமாசாரம் சொல்லேன் நீ யாருப்பா?

"நான் அதோ அந்த கம்பியடிச்சிருக்கு பாருங்க அந்த வீட்டுலேருந்துவரேனுங்க. அந்த ஊட்டுலெ இல்லே கலெக்டர் ராஜமையர் அவருகொளந்தெ ஒங்களெக் கையோடெ இட்டுக்கினுவரச் சொல்லிச்சு. ஏதோ தனியா ஒங்களோடெ பேசணுமாம். நீங்களும் தனியாயிருப்பீங்கன்னு சொல்லிச்சு" என்று சொல்லிவிட்டு அந்த ஆள் என் பதிலை எதிர்பார்த்துக்கொண்டு நின்றான். நானும், "கொஞ்சம் இரு, மூஞ்சியெக்கழுவிட்டுத் தலையெவாரிண்டு வந்துட்றேன்" என்று சொல்லிவிட்டு பாத்ரூமிற்குச் சென்று முகம் கழுவித் தலையையும் க்ளீனாகவாரிக்கொண்டு உடைமாற்றிக்கொண்டு அந்த ஆளுடன் கிளம்பினேன்.

போகும் வழியில் நாங்கள் பேசிக்கொண்டே சென்றோம். நடுவில் அந்த மனிதன் "நீங்ககூட உறவுன்னு நம்ம ஐயாவோடெ மகன் சொல்லிச்சுங்க" என்றபோது, நான் "அம்மா இப்படி முன்னாடியே சொல்லியிருந்தா நாம் லீவு நாளில் போய்ப்பேசிக் கொண்டு தமாஷாக இருக்கலாமே" என்று எண்ணினேன்.

இருவரும் அந்தக் கலெக்டர் வீடு போய்ச்சேர்ந்தோம். அவர் வீட்டிலேயும் எல்லோரும் வெளியே போயிருந்தார்கள்போலிருக்கிறது. வீடு ஒரே நிசப்தமாக இருந்தது. அந்த வேலைக்காரன் என்னை மாடிக்கு அழைத்துக்கொண்டுபோய் ஒரு அறையின் முன்னாலிருந்த ஸோபாவில் உட்காரச்சொல்லி "இருங்க, கொளந்தே தனியா இருக்கான்னு பாத்துட்டு வந்துடறேன்" என்று அறையினுள் மெதுவாக நுழைந்தான். அதன்பின் நிகழ்ந்த சாம்பாஷணை என்னை அப்படியே திகைக்கவைத்துவிட்டது. அவன் போகும்போதே உள்ளே இருந்த அந்தக் கலெக்டரின் "குழந்தை" "ஏண்டா இவ்வளவு நாழி?" என்று அதட்டியது. "இல்லிங்க நான் போய்க் கூப்பிட்டேனுங்க; அவுரு மூஞ்சியைக் கழுவி வேட்டி சொக்காயெல்லாம் மாட்டிக்கிட்டு கண்ணாடிகிட்டே நின்னு கிருப்புவாரிக்கிட்டே ரொம்ப நேரம் பண்ணிப்பிட்டாருங்க; இல்லாட்டி நான் அப்பொவே இட்டாந்திருப்பேனுங்க" என்று அந்த ஆள் முனகிக்கொண்டிருக்கும்போதே அந்தக் கலெக்டர் பையன் "என்னடாது பேத்தரே. பொம்பளெ கிருப்புவாரிக்கிறதாவது வேஷ்டி கட்டிக்கிறதாவது. என்ன உளறரே" என்று சீறினான்.

அதற்கு அந்த வேலைக்காரன் "அடேடெ! நீங்க பொம்பளென்னு எங்கிட்ட சொல்லலிங்களே: "விஜயம் அந்த வூட்டு மாடிலெ இருக்கும்" அப்புடீன்னிங்களே. அவரும் நான் போனபோது மாடிலெதானெ இருந்தாரு. நான் விஜயம் யாருன்னு கேட்டதுக்கு "நான்தான்னு" சொன்னாருங்க. அவரை இட்டாந்துட்டேனே; எப்படிங்க போகச்சொல்றது அவரெ' என்று அவன் சொன்னபோதுதான் எங்கள் வீட்டுமாடியிலிருக்கும் அந்தப்பெண் விஜயம் என்பது எனக்கு ஞாபகம் வந்தது. அவர்கள் ஏதோ உறவுபோல இருக்கு. இந்த ஞானோதயம் முன்னாடியே வந்திருக்கப்படாதா? அதான் போறாத காலம் என்கிறது.

ஸ்ரீ பகவத் கீதா ஸாரம்

பதின் மூன்றுவது அத்தியாயம்

க்ஷேத்திரமும் க்ஷேத்திரஜ்ஞனும்.

(14) ஊனின் படியும் உயிரின் பிரிவும் உயிர்பெறுவார்
ஞானம் பெறுவகையும் ஞானம் ஈன்ற உயிர்ப்பயனும்
ஊன் நின்றதற்கு அடியும் உயிர் வேறிடும் உள்விரகும்
தேன்நின்ற பாதன் தெளிவித்தனன் சிலைப்பார்த்தனுக்கே.

[தேன் நின்ற பாதன்—எப்பொழுதும் தேன் பெருகும் திருவடிகளையுடைய ஸ்ரீகிருஷ்ணன், சிலைப்பார்த்தனுக்கு-காண்டீவத்தைத் தரித்த அர்ஜுனனுக்கு, ஊனின் படியும்—உடலின் வகையும், உயிரின் பிரிவும்-ஜீவாத்மாவின் சொரூபமும், உயிர் பெறுவார் ஞானம் பெறுவகையும்-ஜீவாத்மாவின் ஞானத்தைப் பெற விரும்புகிறவர்கள் அமானித்வம் முதலிய குணங்களை அடையும் வகையும், ஞானம் ஈன்ற உயிர்ப்பயனும் ஆத்மஞானத்தை உண்டாக்கின ஜீவாத்மா சொரூப ஞானமும், ஊன் நின்றதற்கு அடியும்—ஜிவாத்மா உடலுடன் சேர்ந்ததற்குக் காரணமும், உயிர் வேறிடும் உள்விரகும்-ஜீவாத்மாவை வேருகத் தெரிந்து கொள்ளும் அந்தரங்க உபாயங்களும், இவைகளையெல்லாம், தெளிவித்தனன் – தெளிவாக உபதேசித்தான்.]

ஸ்ரீகிருஷ்ணன் பின்வருமாறு கூறினர் - இந்த உடல் க்ஷேத்திரம் என்று சொல்லப்படுகிறது. இதை அறிபவன் க்ஷேத்திரஜ்ஞன் எனப்படுவான். இந்த க்ஷேத்திரஜ்ஞனுக்கு நான் அந்தர்யாமியாக இருக்கிறேன் என்று அறி. இதுதான் எல்லோரும் அவசியம் அறியவேண்டியஞானமாகும்.

தேஹத்தின் சோரூபம்

ரிஷிகளாலும் வேதங்களாலும் பிரம்மசூத்திரங்களாலும் சொல்லப்பட்ட தேஹத்தின் சொரூபத்தை இனி கூறுகிறேன்.

பஞ்சமஹா பூதங்களும், அஹங்காரமும், புத்தியும், பிரகிருதியும் சரீரத்திற்குக் காரணமாகிய வஸ்துக்கள். பதினோரு இந்திரியங்கள், இந்திரியங்களால் அறியக்கூடிய பத்துகுணங்களும், சரீரத்தை அடைந்த வஸ்துக்கள். ஆசை, துவேஷம், சுகம், துக்கம் இவைகள் சரீரத்தினல் உண்டாக்கப்படும் விகாரங்கள். இவ்விதம் ஜீவாத்மா அனுபவிக்கும் விகாரத்துடன் கூடிய சரீரம் சுருக்கமாகச் சொல்லப்பட்டது.

ஆத்ம ஞானத்திற்கு உதவும் குணங்கள்

கர்வமின்மை, டம்பமின்மை, தீங்கு செய்யாமை, பொறுமை, கபடமின்மை, குரு உபாஸனை, பரிசுத்தி, உறுதி, மனஅடக்கம், உலகவிஷயங்களில் பற்றின்மை, தேஹமே ஆத்மா என்ற அபிமானமின்மை, பிறப்பு இறப்பு மூப்பு நோய் இவைகளில் உண்டாகும் துக்கமாகிற தோஷத்தை அறிதல், ஆத்மாவைத் தவிர மற்ற வஸ்துக்களில் பற்றில்லாமை, மனைவிமக்கள் வீடு முதலிய

லைகளில் அதிக ஆசையின்மை, எப்பொழுதும் நல்லது கெட்டது வந்தபொழுதும் ஸமமான மனத்தை உடையதாக இருப்பது, என்னிடத்தில் நிலையான பக்தி செய்வது, ஜனங்களின் சேர்க்கையை விரும்பாமல் தனி இடத்தில் இருப்பது, ஆத்மா ஞானத்திலேயே ஈடுபடுவது, தத்துவ ஞானத்தையே சிந்திப்பது. இதுதான் ஞானம் எனப்படும். இதைத்தவிர மற்றவை அஞ்ஞானம் எனப்படும்.

க்ஷேத்திரஜ்ஞனின் சொரூபம்

அமானித்வம் முதலிய உபாயங்களால் அடையக்கூடிய ஜீவாத்மா, ஆதியற்றது, என்னையே மேலானதாக உடையது, எங்கும் வியாபிக்கக்கூடியது, ஸத் என்றும் அஸத் என்றும் சொல்லப்படுவதில்லை. எல்லா இந்திரியங்களின் காரியங்களையும் செய்கிறது, எல்லா இடத்தில் பரவி நிற்கிறது. இந்திரியங்கள் இல்லாமலே அறியவல்லது; தேஹத்தில் பற்றற்றது; ஸத்வம் முதலிய குணங்கள் அற்றது; ஆனால் அவைகளை அனுபவிக்கவல்லது; அது மிகவும் சூக்ஷ்மமாக இருப்பதால் அறியத்தகாதது, தொலைவிலும் இருக்கும்! பக்கத்திலும் இருக்கும்; தேவமனுஷ்யாதி தேஹங்களில் ஒரே மாதிரி இருக்கிறது; பூதங்களை தரிக்கிறது; ஜோதிக் கெல்லாம் ஜோதியானது; பிரகிருதியைக் காட்டிலும் வேறானது; ஞான ஸ்வரூபமானது; அமானித்வம் முதலிய குணங்களால் அறியத்தக்கது; எல்லோருடைய இருதயத்திலிருக்கிறது. இவ்விதம் க்ஷேத்திரம் க்ஷேத்திரஜ்ஞன் இவைகளை அறிந்தவன் ஸம்ஸாரத்தைக் கடக்கிறான்.

உடல் உயிர் சேர்க்கை அனாதியானது.

பிரகிருதியும் ஜீவாத்மாவும் அனாதியானவை. ஆசைமுதலிய விகாரங்களும், அமானித்வம் முதலிய குணங்களும் பிரகிருதியிலிருந்து உண்டானவை. சரீரமும் இந்திரியங்களும் தொழில் புரிவதற்குப் பிரகிருதியே காரணம். ஜீவாத்மா சுகதுக்கங்களை அனுபவிக்கக் காரணம். ஜீவாத்மா பிரகிருதியுடன் சேருவதற்கு நல்ல பிறப்பும் கெட்டபிறப்பும் காரணம். தேஹத்திற்கு ஈசுவரனான இந்த ஜீவாத்மாவை அறிபவன் மறுபடியும் பிறப்பதில்லை.

ஆத்மாவை அறியும் முறைகள்

சிலர் ஜீவாத்மாவை மனத்தில் தியானிக்கிறார்கள். சிலர் ஞான யோகத்தினாலும், சிலர் கருமயோகத்தினாலும், சிலர் பிறர்மூலம் கேட்டும் அறிகிறார்கள். இவர்கள் யாவரும் முக்தி பெறுகிறார்கள்.

பிரகிருதி ஜீவர்களின் வித்யாஸம்

அசையும் பொருள் அசையாப்பொருள் எல்லாம் பிரகிருதி ஜீவாத்மாக்களின் சேர்க்கையாலேயே ஏற்பட்டவை. எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாக இருக்கும் ஜீவாத்மாவை இவ்விதம் அறிபவன் ஒருவரையும் மனதினாலகூட துன்புறுத்துவதில்லை. பிரகிருதியே காரியத்தைச் செய்கிறது, ஜீவாத்மா செய்வதில்லை. தேஹத்தின் சுபாவத்தினால் ஜீவாத்மா பாதிக்கப் படுவதில்லை. அது சூரியன் உலகம் முழுவதையும் பிரகாசப்படுத்துவதுபோல் சரீரத்தைப்பிரகாசப்படுத்துகிறது. இவ்விதம் அறிந்தவர்கள் மேலான ஆத்மாவை (பரிசுத்த ஆத்மாவை) அடைகிறார்கள்.

இவ்வத்தியாயத்தின் கருத்து—பிரகிருதியைவிட ஆத்மாவேறானது.

"குழந்தாய்!" என்ற அருமையான அன்பான கனிந்த குரலைக் கேட்டபிறகுதான் மிருநாளினியின் நிசப்தமான யோசனை கலைந்து திரும்பிப்பார்த்தாள். குருநாதர் அவளைத்தேடிக்கொண்டு வந்திருப்பதைக்கண்டு திடுக்கிட்டு எழுந்து, நமஸ்கரித்து வணக்கமாக நின்றாள்.

குரு:—குழந்தாய்! உன்னுடைய உணர்ச்சியின் வேகம் எல்லை மீறிப்போவதால் காரியம் கெட்டுவிடும்போல் பயமாயிருக்கிறது. குழந்தாய்! நாமோ காட்டில் வாழும் மனிதர்கள், உன்னுடைய ஜீவியரகஸியம் பிறர் அறியவே கூடாது. அதிலும் உன்னுடைய நாட்டின்மக்கள் முதலே அறியக்கூடாது. ஏற்கெனவே நடந்துள்ள சம்பவத்தினால் ராணியின் கோபம் அதிகமாகி இருப்பதால் எந்த சமயம் என்ன விபத்து நேருமோ என்று பயப்படும் நிலையில் நாம் இருக்கிறோம். உன் தாயார் உயிருடன் ஜீவித்திருக்கிறார்கள் என்றோ, அவர்களுக்கு ஒரு பெண் இருக்கிறதென்றோ அந்த அரசி அறிந்துவிட்டால் உடனே ரகஸ்யமாக தூதுவர்களை ஏவி உங்களைக் கொன்றுவிடச் செய்வாள் என்பதில் ஐயமே இல்லை. பலவருஷங்களுக்கு முன்பு மறைந்த விஷயத்தைக் கிளப்பாமலேயே நாம்வேலை செய்து வெற்றி பெறும் வழியைத்தேடவேண்டுமேயன்றி நம்மை நாமே காட்டிக் கொள்ளக்கூடாது. அதனால் உன்னுடைய மனோ ராஜ்யம் நாசமாகிவிடுவதோடு உன்னையே இளவரசியல்லவென்றும், உன் தாயார்மீது ஏற்கெனவே உண்டாக்கியுள்ள பழியை ஊர்ஜிதம் செய்யும் மகத்தான அவமானத்தை உண்டாக்கிவிட்டால் அந்த வடு எத்தனை யுகமாயினும் மாறாது; மறையாது. அத்தகைய விபத்துக்களுக்கு இடங் கொடுக்கும் வகையில் நீ எதையும் செய்யாது, ஆற அமர யோசனைசெய்து தீர்க்கதரிசனத்துடன் செய்யுங் காரியந்தான் சரியான வெற்றியை அளிக்குமேயன்றி மற்றபடி எந்த மார்க்கமும் பலனளிக்காது. குழந்தாய்! நீ ஒரு இளவரசி என்றோ, உன்தாயார் ஆனந்தபுரியின் மகாராணி என்றோ நம் மூவரைத்தவிர வேறு யாருக்கும் தெரியக்கூடாது. நீயோ பெண் குழந்தையாய்ப் பிறந்திருப்பதாலும், அதிலும் காட்டில் வசிக்கும் வனதேவதையைப்போல இருந்து இசைப்புலமையில் திளைந்துகொண்டிருப்பதாலும் நாட்டின் வளப்பமோ, நாட்டின் நிலைமையோ எதுவும் தெரியாது இருக்கிறாய்.

இந்நிலைமையில் நீ இராணுவம் திரட்டிப்போருக்குத் தயாராவதென்பது கனவின் உருவெளித் தோற்றந்தானேயன்றி நனவில் பலனளிக்காது. இந்த விளையாட்டைஇதோடு நிறுத்திவிட்டுவேறு எந்த மார்க்கத்தில் உன்தாயைத் திருத்தலாம் என்று யோசிக்கலாம். அவசரப்படாதேம்மா!" என்று மிக்க சாந்தத்துடனும் அன்புததும்பவும் கூறினார்.

மகாமேதாவியாகிய குருநாதர் சொல்லுக்கு மிஞ்சிப்பதில் சொல்லத் தெரியாது சற்றுதிடுக்கிட்டு நின்றாள். தன்னுடைய இதயத்

துடிப்பும் ஆவேசமும் வீணாகிவிட்டதாக ஒரு தோற்றம் உண்டாகி யதும் பரிதாபம், ஏமாற்றம், ஏக்கம் முதலிய உணர்ச்சிகளுடன் குருநாதரைப் பார்த்தாள்...கண்ணீர் மளமளவென்று பெருகியது...நாத்தழுதழுக்க 'ஸ்வாமீ! என்தாயாரை மீண்டும் அந்த பட்டமகிஷிக்குரிய ஸிம்மாஸனத்தில் ஏற்றி அந்த தாதியின் கொழுப்பை அடக்குகிற வரையில் என்னாத்திரம் தீராது. அன்று, த்ரௌபதி, கவுரவ கிராதகர்களின்முன்பு சபதம் செய்ததுபோல் இன்று நான் சபதம் செய்துவிட்டேன். அதுவரையில் வ்ரத மனுஷ்டித்து என் காரியத்தில் வெற்றியும் சந்தோஷமும் அடைவேனே யன்றி நான் பின்னடைய மாட்டேன். குருஜீ! எனக்கு இன்னொரு யோசனை தோன்றுகிறது. என்தகப்பனருக்கு விரோதியான சிற்றரசர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கலாம்; அன்றி சம்பந்தமில்லாத மற்ற இதர அரசர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கலாம். அவர்களிடம் நாம் சென்று உதவிகோரி ஏன் படையெடுத்துச் சென்று பங்கப்படுத்தக் கூடாது?...

குருநாதர் கடகடவென்று சிரித்துவிட்டார். "அம்மணீ! உன்னுடைய இதயத்துடிதுடிப்பை நான் கண்ணாடியில் காண்பதுபோல் காண்கிறேன். யுத்தமாவது, படையெடுப்பாவது? அந்த பயங்கரத்தின் கொடுமையை நீ சற்றும் அறியாது பேசுகிறாய். எத்தனை வீரர்களை பலி கொடுக்க நேரும் ஒருயுத்தத்தினால் தெரியுமா?... ராம்...ராம்....ஹிம்ஸையை உண்டாக்கியா நாம் சுகப்படவேண்டும்? குழந்தாய்! புத்தபெருமானின் அஹிம்ஸா உபதேசத்தை நீ படித்தும் மறந்துவிட்டலாமா? இழந்து விட்ட செல்வத்தை, பதவியை மீண்டும் பெறுவதற்காக எத்தனை ஆட்களைப் பலிவாங்கவேண்டும் தெரியுமா! இத்தகையகொலைப்பாதகத்தின் மத்தியில் நீ விளையாட நினைக்கிறாயாம்மா!"...என்றதைக் கேட்கக் கேட்க மிருநாளினியின் மனத்தில் ஏதேதோ கலக்கங்களும், தனக்கு மகத்தான தோல்விதான் கிட்டப்போகிறது என்கிற ஏக்கமும் அதிர்ச்சியும் தான் உண்டாயின. தான் சபதம் செய்தது முற்றிலும் வீணாகி, வியர்த்தமாகிவிட்டது என்றே தோன்றிவிட்டதால் ஒன்றுமே பதில் பேசாது மவுனமாய்க் கல்லுபோல் நின்றாள். அவள் பார்வை ஆகாயவெளியை நோக்கி இறைஞ்சுவதுபோலிருந்தது.

12

இந்த சங்கீத வித்யாகுருகுலத்தில்முக்யமாக நவராத்ரி உத்ஸவத்தைததான் அதிவிமரிசையாகக் கொண்டாடி ஸரஸ்வதி பூஜைசெய்து மறுநாள் விஜய தசமியன்று குருகுலத்தில் பாட்டுக் கற்றுக்கொண்டுபோகும் வித்யார்த்திகளுக்கு விடைகொடுத்தனுப்புவதும் புதிதாகச் சேர்பவர்களைச் சேர்த்துக்கொள்வதும் வழக்கம். அன்றையதினம் ஸரஸ்வதிக்குத் திருவிழாவே நடப்பது போன்ற வைபவமாக நடக்கும்.

மகாநவமி இன்னும் ஒரு வாரந்தான் இருக்கிறது. அதற்குள் இத்தகைய சம்பவங்கள் நடந்துவிட்டதால் இதற்குமுன்பிருந்த உத்ஸாகமோ, பரபரப்போ மிருநாளினியிடம் மறைந்தேபோயிற்று. பூஜாரிணியின் இதயமும் பெருங்குழப்பத்திற் குள்ளானதால், அவர்களும் ஏதோமாதிரியான கவலையுடன் எந்திரம்போல் வேலை செய்கிறார்களேயன்றி பழையதெம்பும் ஆர்வமும் காணப்படாத தால் குருஜீக்கு இதுவிஷயத்தில் மிக்ககவலை உண்டாயிற்று.

பாவம்! தன் ஸிம்மாஸனத்திலமர்ந்து அரசபதவியுடன் அதி காரம் செய்யவேண்டியது போய், இம்மாதிரி யொரு நிலைமையில் இருப்பதைக் காண அவருக்கே பரிதாபமும் பச்சாத்தாபமும் உண் டாகிவிட்டது. எது எப்படியிருப்பினும் இந்த மாறுதல்களை வெளிக்குக் காட்டாமல் எப்படியாவது பூஜாரிணியை நடத்தும்படி ப்ரத்யேகமாகக் கோரவேண்டும். மிருநாளினிக்கும் பூஜாரிணி யைக் கொண்டுதான் சொல்லி காரியத்தை முடிக்கவேண்டும், என்று குருநாதர் தீர்மானித்துக்கொண்டு பூஜாரிணியிருப்பிடம் வந்தார். பூஜாரிணியிடம் யாரோ பேசும் குரல் மெல்லக் கேட்ட தால் தூரவிருந்து கவனிக்கத் தொடங்கினார்.

பூஜா:—குழந்தாய், மிருநாளினி! என் வார்த்தையைக் கேளு. வீண்பிடிவாதம் செய்யாதே. நம்மை இத்தனைதூரம் ஆதரித்து வெகு வெகு ப்ரேமையுடன் வளர்த்துவரும் குருநாதரின் முகம் இந்த இரண்டு நாட்களாக வாடி வதங்கி கவலை தோய்ந்திருப்பதைப் பார்க்க என் மனது பயந்து நடுங்குகிறது. முற்றும் துறந்த முனி வரைக் கூட கவலையும் குழப்பமும் பாதிக்கும்படி நான் குரு த்ரோகமாக நடந்துவிட்டேனே என்று தவிக்கிறேன். பகவானைக் கூட, ஒருசமயமில்லையெனில் ஒரு சமயம் மனம் நோகப் பேச லாம்; ஆசாரியனை அவ்வாறு சொல்வது கூடாது. அவருடைய ஆதரவு இல்லை என்றால் நாம் எங்கு எப்படி அலாய்ப்பறந்திருப் போமோ! அதை நீ முதலில் கவனித்து நடக்கவேண்டும். உன்னு டைய ரத்தக் கொதிப்பை நானறிவேன். வீரக்ஷத்திரிய குலத்தி லுதித்த நீ உள்ளம் உடைந்து பதைபதைப்பதன் உணர்ச்சியை நானறிவேன். இன்னும் சில தினங்கள் இந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு மெல்ல பொறுத்திருந்து இதுகாறுமுள்ள பழைய உள்ளத்துடன் நவராத்திரி உத்ஸவத்தை முடித்துவிட்டு விஜயதசமி யன்று அந்த தேவியின் அருளால் உனக்கு ஜயத்தைக் கொடுக்கும் படி ப்ரார்த்தனை செய்து அன்று ரகஸியமாக உன் காரியத்தை ஆரம் பித்தால் நீ பரிபூரண வெற்றியடைவாய் என்று தோன்றுகிறது.

மிருநா:—அம்மா! உங்கள் வார்த்தைக்கு மறுப்போ, எதிர் ப்போ நான் சொல்லமாட்டேன். இருப்பினும் எப்படியாவது அந்த ஆனந்தபுரி ராஜ்யலக்ஷ்மியை நான் தரிசித்து வரவேண்டும் என்று என்னுள்ளம் ஆவலால் துடிதுடிக்கின்றது. நவராத்ரி உத் ஸவத்திற்குள் நான் தகுந்த துணையுடன் அந்த ராஜ்யத்தின் ஸௌந் தர்ய சோபையை, அரண்மனையின் அத்புதத்தை, ஆனந்தபுரியின்

ஆனந்தத்வஜத்தையும் கண்ணாரக்கண்டு, முதலில் படபடக்கும் என் ஆவலைச் சற்று தணித்துக்கொள்கிறேன். அதற்குமட்டும் தாங்கள் பரிபூர்ணக்ருபையுடன் அனுமதியளிக்க வேண்டும். நம் குருநாதரையும் கேட்டு விடை யளித்துத் தக்க துணையுடன் எனக்கந்த

ஆசையைப் பூர்த்தி செய்து வைக்கவேண்டும். அந்த அத்புதநகரை என்னுடைய உரிமை பூமியை, என் சொந்த நாட்டை நான் ஒரு முறை கண்ணால் பார்த்துவிட்டால் போதும். பிறகு நான் உங்கள் இஷ்டப்படியே நவராத்ரி உத்ஸவத்தை வழக்கம்போல் நடத்தி விட்டு விஜயதசமியன்று என் காரியத்தை ஆரம்பிக்கிறேன்....

என்று கூறுவதைக் கேட்டுக்கொண்டு வந்த குருநாதர், "தாயே! அனுமதியின்றி நான் உள்ளே ப்ரவேசிப்பதைப்பற்றி மன்னிக்க வேண்டும். அந்த விஷயத்தைக் குறித்து நான் தங்களிடம் பேச வந்தேனே, அதே சம்பாஷணை இங்கு நடப்பதுபற்றி சந்தோஷ மடைகிறேன். குழந்தையின் விருப்பப்படியே ஆநந்தபுரிக்கு அழைத்துச்சென்று தன்சொந்த நாட்டைத் தான் கண்டு களிக்கும் படிச் செய்ய அனுமதியளியுங்கள். அதற்கான தகுந்த துணையாக நானே சென்று குழந்தையின் ஆசையை உடனிருந்து பூர்த்தி செய்து அழைத்துவருகிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?" என்றார்.

குருநாதர் தனக்கு இத்தனை சடுதியில் இத்தகைய மகோபகாரத்தைச் செய்ய இசைந்திடுவார் என்று ம்ருநாளினி நினைக்கவே இல்லை. அவர் ஒருகால் மறுத்துவிடுவாரோ, என்றுகூட பயந்தாள். அதற்கு நேர்மாறாக அவரே நேரில் வந்து சொல்வதைக்கேட்டு, மிருநாளினியின இளந்தளிர் உள்ளம் கரைகடந்த ஆனந்தத்தில் திளைந்தது. உடனே குருநாதரின் காலில் விழுந்து வணங்கி "ஸ்வாமி! தன்யனுனேன்; என்னுடைய இதயத்துடிப்பின் வேகத்தை பகவான் தான் தாங்களறியும்படிக்குச் செய்திருக்கிறார். என்னுடைய முதல் ஆவல் பூர்த்தியாகுமாயின் அனைத்தும் ஜெயமாகிவிடும் என்கிற நம்பிக்கை என்னிதயத்தில் போராடுகிறது. ஸ்வாமி! இந்த காரியத்தை ரகஸியமாக முடித்துவைக்கவேண்டும்" என்று கெஞ்சினள்.

பூஜா:—குருநாத! இந்த விஷயத்தில் என் மனமென்னவோ சஞ்சலமடைகின்றது. என்னால் விவரிக்க முடியாத வேதனை பெரும் மலையைப்போல் நெஞ்சை அழுத்துவதால் ஒன்றுமேதோன்றவில்லை. என்னுயிருள்ள மட்டும் இதே த்யாகத்துடன் என்காலத்தை குருகுலத்தில் கழித்துவிடவே தீர்மானித்திருந்த என்னை சோதிப்பதற்காகவே இச்சம்பவங்கள் நடந்தன என்றுதான் தோன்றுகிறது. ஏதாவது ஆபத்து நேர்ந்துவிடுமோ, என்று என்னையறியாது பயம் நடுங்குகிறது. பட்ட கஷ்டங்களெல்லாம் போதும், இனிமேல் ஒன்றுமில்லாதிருக்கவேண்டுமே என்றுதான் பயமாயிருக்கிறது. அதோடு, இப்போதுதான் அந்த ராணி இவளைப்பார்த்து விட்டுப் போயிருப்பதால்...

குரு:—மகாராணி,...

பூஜா:—ராம்; ராம்: குருதேவ! வேண்டாம்: வேண்டாம்; அந்தப் பெயரே இனி இந்தக்கட்டைக்கு வேண்டாம். இத்தனை நாட்களையும்போல் நான் தங்களுடைய அடிமை; சிஷ்யை என்பதை மறக்கவேண்டாம். தவறிக்கூட இனி அந்த துரத்ருஷ்டப் பெயரைக் கூப்பிடாதீர்கள்..

183145

மிருனா:—அம்மா! நீ அப்படிச் சொல்லும்போது என்னுள்ளம் பகீரென்று பற்றி எரிவது போன்று வேதனை செய்கிறது. எந்த ஒரு மகோன்னதமான ஸிம்மாஸனமும் மகாராணி என்கிற பட்டப் பெயரும் உன்னை இழந்திருக்கிறதோ, அதேஸிம்மாஸனத்தில் உன்னை வீற்றிருக்கச்செய்து உன்னுடைய ப்ரஜைகளும் மற்றவர்களும் இதே பட்டப் பெயரான மகாராணீ என்று கூப்பிடச் செய்து என் காதாரக் கேட்டுக் கண்ணாரப்பார்க்காவிட்டால் நான் உயிர் வாழ்வதில்லை. என்னுடைய மனோரதம் ஈடேறாதுபோய்விடுமானல், நான் உன்னையும் கடலில் தள்ளிவிட்டு நானும் சந்தோஷமாகச் சாவேன். இது சத்தியம். தாயே! நமது குலதெய்வத்தின் மீது ஆணையாக இது சத்தியம். நான் உருவத்தில் பெண்ணாகப் பிறந்து விட்டேனே என்கிற கவலை உன்னை விட்டு அகலும்படி நான் ஒரு க்ஷத்திரிய வீரனின் கடமைகள் எத்தனை உண்டோ அத்தனையும் செய்து உன்னை மகிழ்விக்கின்றேன். தாயே! இனி என்னை ஒரு பெண்ணாயிற்றே என்று இளப்பமாகச் சொல்லவோ நினைக்கவோ வேண்டாம். குருதேவா! உங்கள் பாதகமலங்கள்மீதே ஆணைவைத்து இந்த சபதத்தைச் செய்கிறேன் என்று கூறி வணங்கினாள்.

ராணியின் மடைதிறந்ததுபோன்ற விழிகளின் ப்ரவாகத்தை அடக்க அவளாலேயே முடியவில்லை. மிருநாளினியை இழுத்துக் கட்டிக் கொண்டு பதில்பேசாது தவித்தாள். பிறகு சற்றுதைரியத்தையடைந்து "குருதேவா!...குழந்தையின் அலை மோதும் ஆசையை நீங்களும் ஆதரித்துப்பேசிவிட்டதால் பூர்ணசந்திரனைக் கண்டு கொந்தளிக்கும் கடலின் அலைகளைப்போல் அவளுடைய இதயக் கடலில் ஆசைஅலைகள் மோதிமோதித்தாண்டவமாடுகின்றன. தந்தையின் முகமறியாத பேதையாக இவள் இருப்பினும் அரசாங்கத்தைச் சேர்ந்த பழய மனிதர்கள் அவளை ஜாடையால் சந்தேகித்து விட்டால் என்ன செய்வது?...

குரு:—தாயே! அந்த பயம் தங்களுக்குச் சிறிதும் வேண்டாம்; என்னுடைய அந்தரங்க இதயத்தில் வீற்றிருக்கும் கண்ணன் காட்டும் வழியில்தான் நான் செல்வேனேயன்றி என்மனத்தின் இச்சைக்கோ, பிறருடைய உபதேசத்திற்கோ, இந்த இதயம் இடந்தராது. ஆகையால் தாங்கள் தயவுசெய்து ஆச்ரமத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் குழந்தையை ஆனந்தபுரிக்கு அழைத்துச் சென்று அவள் ஆசையை நிறைவேற்றிவிட்டு வருகிறேன். கடவுளை நம்பினோரை அவர் கைவிடவே மாட்டார். இந்த நம்பிக்கை எனக்கு உண்டு. என்னிடம் பரமபக்தியும் நம்பிக்கையும் உள்ள தாங்கள் நிம்மதியாக இருங்கள்—என்று தேற்றிவிட்டு மிருநாளினியை வெளியே அழைத்துச் சென்றார்.

என்னதான் தேறுதல் சொல்லியபோதிலும் பூஜாரிணியின் மனது நிலைகொள்ளவே இல்லை. சாந்தி என்கிற பொருள் எந்த மூலையில் ஒடி ஒளிந்ததோ தெரியாது. சாந்தியிருந்த இடத்தில்

சஞ்சலமும் சங்கடமும் ஏக்கமும் குடிகொண்டு விட்டன. எத்தகைய கஷ்டங்கள் வந்தாலும் யாரும் அது சமயம் பகவானை நினைத்து வேண்டுவதைத் தவிர வேறு என்ன தோன்றும்? அதையே பூஜாரிணியும் செய்யத் தொடங்கினாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் குருதேவர் பாலசன்யாசி ஒருவனை அழைத்துக்கொண்டு பூஜாரிணியின் முன்பு நின்றார். பூஜாரிணி சடக்கென்று எழுந்து நின்று, த்யாகிகளுக்குற்ற மரியாதையைச் செய்ய முற்படும் முன்பு...சன்யாசி கடகடவென்று நகைத்துவிட்டு "அம்மா! எனக்குக்கூடவா உபசாரங்கள்?...பெத்தமகளுக்குக் கூட்வா வந்தனமளிப்பது?...இப்போது உன்னுடைய மக்கள் மனிதர்கள் யாரும் என்னை எத்தகைய அடையாளமும் கண்டுகொள்ள மாட்டார்களே!"...என்றாள்.

ஆச்சரியத்தினால் தாக்கப்பட்ட பூஜாரிணி குருதேவரையும் சன்யாசியையும் உற்றுப்பார்த்துக் கண்களை மூடி பகவானை நோக்கிக் கரங்குவித்து விடையளித்தாள். அடுத்த நிமிஷமே குருதேவரும் பாலசன்யாசியும் தொலைதூரம் நடந்து சென்றார்கள். தூரவிருந்துபார்க்கும் பூஜாரிணிக்கு விச்வாமித்ர முனிவர் பின்னால் ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் சென்ற காட்சியே நினைவுக்கு வந்தது. இங்கு லக்ஷ்மணனுக்குப் பதிலாக குருதேவரின் அந்தரங்க சிஷ்யனாகிய நாகானந்தன் கூட இவர்களுக்கு வேண்டிய சாமான்களைத் தாங்கிச் சென்றான். "குழந்தைக்கு யாதொரு விபத்துமின்றி அவளுடைய மனோவிருப்பத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்" என்று பகவானை அவள் இதயம் இடைவிடாது ப்ரார்த்தனை செய்து வேண்டியது.

13

"குழந்தாய்! இனி உன்லக்ஷ்யம் ஈடேறி நாம் ஊர்செல்லும் வரையில் உன் பெயர் த்யாகானந்தன் என்பதை மறக்காதே. த்யாகத்தைச் செய்து உன்காரியத்தில் வெற்றிபெற்று உன்தாயை அரியாஸனத்திலமர்த்தி நாம் கண்டு களிக்கவேண்டும். அதுவே என்னுடைய பேராவலுமாகும். அதோ எல்லைவகுத்து பெரிய மண்டபம் தெரிகிறதே, அதுதான் ஆனந்தபுரியின் ஆரம்ப எல்லையாகும். அம்மண்டபத்தில் எத்தனை அழகான கல்வெட்டு பொம்மைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பார்க்கவே நாம் வந்ததாயும் நாம் ஊர்ஊராகச் சுற்றும் சாமியார்க் கூட்டமென்றும் சொல்லிக்கொண்டுதான் உள்ளே போகவேண்டும். இல்லையேல் நம்மை அனுமதிக்கமாட்டார்கள். ஒரு நாட்டவர் மற்றய நாட்டிற்குள் ப்ரவேசிப்பதென்றால் சாமான்யமாக விடமாட்டார்கள், அதற்கு அனுமதிச் சீட்டுப் பெறவேண்டும். என்ன காரணக் எதற்காகப் போகிறீர்கள் என்பதுபோன்ற கேள்விகள் பிறக்கும். நாம் சன்யாசிக் கூட்டமாகையால் நம்மைச் சந்தேகிக்க இடமிருக்காது என்று நினைக்கிறேன். எதற்கும் நமது சங்கே

பஜனை நமக்கு உதவி செய்யாமல் போகாது. எல்லையை அணுகும் போது நாம் பாடிக்கொண்டே போவோம்" என்று எச்சரித்தார்....

மிருநாளினியின் உள்ளம் நிமிடத்திற்கு நிமிடம் தன்னுடைய சொந்த நாட்டைத் தான் பார்க்கப்போகிறோம் என்கிற மகத்தான ஆசையால் உள்ளத்திலடக்கமுடியாத ஒருவித உவகையும் வேட்கையும் பொங்கித்ததும்புகிறது. ஆனந்தபுரியின் எல்லையைக் காட்டும் மண்டபமும், அதனமீது கோபுரத்தில் அந்த நாட்டின் கொடி கம்பீரமாகப் பறப்பதும் தூரவிருந்து பார்க்கும்போதே மிருநாளினியின் உத்ஸாகம் கரைபுரண்டது. அதைப்பார்க்கப் பார்க்க ஆனந்தம் எல்லை மீறும் உணர்ச்சி முகத்தில் ஜாஜ்வல்யமாக ப்ரகாசிப்பதைக் கண்டு ஸ்வாமிகளின் இதயமும் ஆனந்தத்தினால் நிரம்பியது.

"குருதேவா! இக்கோட்டையா ஆனந்தபுரியின் எல்லை வகுக்கும் இடம்?...அடாடா!...இதுவே இத்தனை அழகாக இருக்கிற தென்றால் ஊருக்குள் எத்தகைய அத்புதங்களும் அழகும் நிறைந்திருக்கும் என்பதை நினைக்கும்போதே எனனிதயததில் அமுதம் ஊறுவதுபோலிருக்கிறதே" என்று கூறும்போது அவள் விழிகளில் கண்ட அத்புத தேஜஸின் அழகை வர்ணிக்கவேமுடியாது குருநாதர் அப்படியே பார்த்துக்கொண்டு நின்றார். 'என்ன இருப்பினும் க்ஷத்ரிய உதாரத்தின வேகமும் த்யாக பிம்பததினால் பழக்கப்பட்ட வைராக்யமும் வீணாகிவிடுமா!' என்று தனக்குள் வியந்தார்.

இதற்குள் கோட்டைவாயிலை எட்டினார்கள். கோட்டை வாசல்காப்பான் கையில் பெரிய துப்பாக்கியுடன் பாரா கொடுத்துக்கொண்டு நிற்கிறான். இன்னும் இரு சிப்பந்திகள் அங்கு போவோர் வருவோர்களின் உத்தரவுச்சீட்டுக்களை வாங்கிப்பார்த்து கையொப்பமும் முததிரையும் போட்டுக்கொடுப்பதும் கொண்டுவரும் சாமான்களைப் பரிசோதித்துக்கொடுப்பதும் செய்கிறார்கள்.

குருதேவருடன் வந்த நாகானந்தனும் மிருநாளினியும் அந்த மண்டபத்திலுள்ள சிற்ப வேலைகளைப் பார்த்து ப்ரமிப்படைந்து இப்படியும் கல்லினால் ஒரு விசித்திரம் செய்ய முடியுமா? என்ற அபாரமான ஆச்சரியத்தையடைந்து அதன்மீது வைத்த விழியை வாங்காமல பார்த்துக்கொண்டு நின்றார்கள். காட்டிலேயே வாஸம் செய்துவந்த பேதை, சிற்ப வேலைகளைப்பார்த்ததே கிடையாதாகையினால் அந்த ஆச்சரியம் அவளால் தாங்காமல் அலைமோதியது. சிற்பங்களின விளக்கங்களும் கூடவே எழுதியிருந்ததால் அவைகளைப் படித்தறிந்து இன்பமடைந்தவாறு பார்த்து வந்தாள்.

ஒரு பக்கத்துச்சுவரில் ஆனந்தபுரியின் ஆதி அரசன்:எதிரியிடமிருந்து தன் நாட்டை ஜயித்த வீரப்ரதாப அருளானந்த ப்ரபு என்று எழுதி அவருடைய கம்பீரமான பிம்பத்தையும் செதுக்கி இருப்பதைக் கண்டதும் அவள் தேகம் மயிர்க்கூச்செறிந்தது. "எனது மூத்தோர்வம்சதிலகமா இவர்!...அடாடா...சுமார் 100 வருஷங்களுக்கு முற்பட்ட மகானுபாவரா இவர்!" என்று உள்ளுக்குள் எண்ணிக் கரங்குவித்துப் பூரித்தாள். இத்தகைய மகா வீரரின்

மரபில் பிறந்த நானா இப்படியிருக்கிறேன்!" என்று ஏதேதோ எண்ணங்கள் மலர் உதிர்வதுபோல் உதிர்ந்தன.

அந்த அருளானந்தர் உருவச் சிலையின்கீழ்—வருஷம், மாதம், தேதி முதலியன போட்டு, எதிரியிடம் இவர்களுடைய நாடு பிடிபட்டதும், இவர் அப்போது சிறு குழந்தையாயிருந்ததும் இவருக்கு புத்தி தெரிந்தபிறகு தாமே வீரத்துடனும் தீரத்துடனும் படைகளைத் திரட்டி வேறு அரசனின் உதவியைக் கோரி எதிரி மீது பெரும் படையெடுப்பு நடத்தித் தனது ராஜ்யத்தை ஜெயித்துத் தன் தேசக் கொடிக்கு வணக்கஞ் செய்து அதை நாட்டிப் பறக்க விட்ட மகா பராக்ரமசாலி...என்றும், எதிரியைப் புறங்காட்டி ஓடச் செய்த போதிலும் அந்த எதிரியின் குல ஸ்த்ரீகளையோ நாட்டுப் பெண்களையோ மிக்க மரியாதையாயும் தார்மீக உணர்ச்சியுடனும் நடத்திய மகானுபாவன் என்றும், கல்வெட்டு எழுத்தில் சிலாசாஸனம் செய்திருப்பதை திரும்பத் திரும்பப் படிக்கும்போது ஆனந்தமும் புதிய இன்ப உணர்ச்சியும் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. இதே மகிழ்ச்சியில் அவள் மிதக்கும்போது மற்ற எதையும் கவனிக்கவே மறந்துவிட்டாள். குருநாதர் மட்டும் சிற்ப வேலைகளைப் பார்த்துவிட்டு உள்ளே போக எத்தனிக்கையில் கோட்டைக் காவலாளி "யாரய்யா நீர்? பாஸ் எங்கே?" என்று தனது அதிகார தோரணையில் அதட்டினான்.

குருநாதர் மிக்க சாமர்த்யசாலியாகையால் "அப்பா! ஊரூராகச் சுற்றியலைந்து ஸ்வாமிதர்சனமும், நதிகளில் ஸ்நானமும் செய்து ஊர்விசித்ரங்களைப்பார்த்து மகிழும் ஆண்டிப் பரதேசிகளுக்கு அனுமதிச் சீட்டு ஏதப்பா! இன்று இந்த ஊர், நாளை இன்னொரு ஊர் என்று காலங்கழிக்கும் நாடோடிகளப்பா நாங்கள். நீ அனுமதி யளிக்கவில்லை என்று மறுத்தால் நாங்கள் திரும்பி வேறு இடம் போகிறோம்; அவ்வளவுதானே." என்று துறவி என்கிறதை ஸ்தாபித்து உறுதியாகக் கூறினார்.

காவல்காரன்:—ஏஞ்சாமீ! ஊர்சுத்ர நாடோடிகளா நீங்க? அப்படிப்பட்டவங்களுக்கு இங்கே என்னவேலே?...

குரு:—அப்பனே! எங்களைப் போன்ற துறவிகளுக்குக் காடும் சமம், நாடும் சமம், வீடும் சமம்; எந்தெந்த ஊரில் உயர்ந்த நதி இருக்கிறதோ, உத்க்ருஷ்டமான கோயில் இருக்கிறதோ அவைகள் உள்ள இடங்களுக்குத்தான் நாங்கள் போவோமேயன்றி அரசனின் அரண்மனையைப் பார்க்கவோ, பகுமானங்கள் பெறவோ நாங்கள் வரவில்லை. இந்த ஆனந்தபுரியில் ஆநந்த நடேசனின் கோயில் வெகு ச்லாக்யமென்றும், காவேரி ஸ்நானம் மிக்க உயர்ந்தது என்றும், எங்களைப்போன்று ஊர்சுற்றும் பரதேசிகள் சொன்னார்கள். ஆகையால் வந்தோம். விட்டால் விடு. இல்லையேல் எங்களுக்குக் கவலை இல்லையப்பா! ஆண்டிப்பரதேசிகளுக்கு அண்டின இடமெல்லாம் ஸ்வாமிதரிசனந்தான்" என்று அலக்ஷியமாகக் கூறினார்.

எப்போதும் எந்த விஷயத்திலும் ஒரு வஸ்துவைப் பார்க்க வேண்டும், பெறவேண்டும் என்கிற ஆவல் அதிகமாயிருந்து அதைப் பற்றிப் பிடிவாதமாகக் கேட்கும்போதுதான் எதிரிகளும் முடியாது என்று உக்கிரத்தோடு மறுப்பார்கள். அவர்கள் மறுக்கும் வேகத்தில் இவர்கள் கோபமுற்றுப் பின்னும் கேட்பதும் அவர்கள் மறுப்பதும் ரஸாபாஸமாகி விடுவது வழக்கம்.

பற்றற்றதன்மையில் பேசினால் காரியம் கட்டாயம் கைகூடும்; இதைப் பலர் அறிவதில்லை. தமது ஆவலைக் கொட்டியளந்து விடுவதே முக்யநோக்காகப் பதறுவார்கள். உலகமறிந்த ஞானியாகையினால் குருநாதர் வெகுவெகு அலக்ஷியமாகச் சொல்வதைக் கேட்ட காவலாளி உதட்டைப் பிதுக்கினான். அவனுக்கு மேலே சொல்வதற்கு ஒன்றுமே தோன்றவில்லை, "ஏஞ்சாமீ! கோவிச்சுக்காதே. இந்த சாமியார் வேஷத்தைக் கண்டாலே எங்களுக்கு பயங்க, ஒலகம் மகாபோக்ரிங்க. கபடசாமியாருங்க வந்து……

என்பதற்குள் குருநாதர், "ராம்! ராம்" என்று காதைப் பொத்துக்கொண்டு, "ஏண்டாப்பா! ஊர்வம்புகளும், ஏமாற்றமும்; வீண்வம்பும் எனக்கு எதற்கு? இஷ்டமிருந்தால் விடு, இல்லையேல் நாங்கள் போகிறோம்; கபடசாமியாரோ கள்ளச்சாமியாரோ; இந்த அக்கப்போரைக் கேட்க நாங்கள் வரவில்லை" என்று ஒரே போடுபோட்டவாறு பிகுவுடன் திரும்பிச் செல்லக் கிளம்பினார்.

"சாமி சாமீ! கோவிச்சுக்காதே சாமீ! ஒம் மூட்டையே அவுத்துக்காட்டு. நாங்க குடுக்கர சீட்டை கையிலெடுத்துக்கிட்டுப் போங்க. அப்பதான் மத்த சுங்கச்சாவடிகளில் உங்களை விடுவாங்க. போயி சாமிதரிசனம் பண்ணிகினுவாங்க" என்றான்.

இதற்குள் நாகாநந்தனும் தன் கையிலிருந்த மான் தோல்பையிலுள்ள சாமான்களைக் கீழே கொட்டினான். காஷாய உடைகளும் கப்பரை கமண்டலமும் தவிர வேறு ஒருசாமானும் காணாததால் காவல்காரன் விழுந்துவிழுந்து சிரித்துவிட்டு, "சாமியாரே! நீ சரியான சாமியார்தான்போ…அதோ அந்தய்யா குடுப்பாரு சீட்டு. அதை பத்தரமா கொண்டுபோ" என்று தானே வழியனுப்பினான்.

சிற்பங்களைக் கண்டு அவற்றின் அழகிலும், சரித்திரத்திலும் மூழ்கிப் போன மிருநாளினியைக் கண்டு குருதேவர் அவளுடைய முக விகாசத்தையும் ஆனந்தத்தின் உச்ச நிலையையும் கண்டு இதயத்திற்குள் பூரித்தவாறு "வாப்பா, த்யாகயோகி! நாகாநந்தம்!" என்று அழைத்தார்.

"குருஜீ! இதோ இதைப்பாருங்கள்" என்று ஜாடைகாட்டினாள். அருளானந்த மன்னரின் கம்பீரத் தோற்றத்தையும் அவர் சிலைக்குக் கீழே எழுதியிருக்கும் விஷயத்தையும் படித்து உள்ளுக்குள் அவரும் உவகைபூத்தார். வாஸ்தவம்: தன்னுடைய மூதாதையின் புகழைப்பார்த்து, அச்சிறு பெண் உள்ளம் பரமானந்த ஸாகரத்தில் மூழ்கியிருப்பது சகஜந்தானே! என்று தமக்குள் எண்

ணியவாறு அவர்களையும் அழைத்துக்கொண்டு கோட்டை முதல் வாசலைத் தாண்டிச் சென்றார்கள்.

காவல்காரர்கள் மிருநாளினியை உற்று உற்றுப் பார்த்துவிட்டு, "எஞ்சாமீ! இத்தினி சின்ன வயசிலே இந்தய்யாவே சாமியாராக்கி விட்டீங்களா; இவருக்குக்கூட ஒலகத்து ஆசே"...என்பதற்குள் மிருநாளினி தன் குரலை கனமாய் கரகரப்பாய் வைத்துக் கொண்டு கடகட வென்று சிரித்துவிட்டு "உம்....இந்த உலகமே எங்களுக்கு ஒரு தூசிக்குச் சமானம். நன்றாகப் பத மடைந்த உள்ளத்தில் வைராக்யமென்கிற பீடத்தில் கடவுள் பக்தி மட்டுந்தான் செங்கோல் செலுத்துமேயன்றி காசுக்கு உதவாத அல்ப ஆசைகளுக்கு அடிமையாகும் ஆத்மா இதுவல்லாப்பா! கற்பாசிக்கு அரசனும் துரும்பு. ஆண்டிக்கு உலகமே துரும்பு...தெரியுமா" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியதைக் கேட்ட இரண்டு காவல்காரர்களும் அபாரமான வியப்பும் திகைப்புமடைந்து ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து விழித்தார்கள்.

கம்பீரமான நடை நடந்தவாறு மூவரும் சென்று விட்டார்கள். ஆநந்தபுரியின் ஆனந்த காக்ஷிகள் ஆரம்பமாகிவிட்டதைக் கண்டதும் மிருநாளினியின் சந்தோஷம் கூறத்தரமில்லாது கரைகடந்தது. கோட்டை மதில்களும், கோயிலின் கோபுரங்களும், வீதிகளின் அழகும், கட்டடங்களின் அத்புதங்களும் ஆங்காங்கு குளிர்ச்சியான பெரிய தோட்டங்களும், வீதிக்கொரு சத்திரமும் சாவடியும் பார்க்கப் பார்க்க மிருநாளினியின் இன்ப உணர்ச்சிகள் தனிக்காட்டுப் பறவைகளைப்போல் சுதந்தரச் சிறகடித்துப் பறக்கவாரம்பித்தன.

14

தலைநகரத்தை எட்ட எட்ட மிருநாளினியின் ஆவலும் பதினாயிரம் பங்காகப் பெருகியது. ஒரு ப்ரம்மாண்டமான கட்டடத்தின் முன்னால் "ராஜா சத்திரம்" என்கிற பெயரை சலவைக் கல்லில் பொருத்தியிருந்தது. அதற்கு மேல்புறத்தில் அரசனின் பெரிய புகைப் படத்தை மாட்டியிருந்ததுகண்டு தடை கட்டிய நாகம்போல் நின்றுவிட்டாள். அடுத்தக்ஷணமே, "குருதேவா!...இவர்தான்..." என்று வாயெடுத்துவிட்டாள்.

இவளுடைய மயக்கத்தைக் கண்டு குருதேவர் சற்று அச்சமடைந்து அவளை முழித்துப் பார்த்தார். ஒருவரும் எத்தகைய சந்தேகமும் அடையாதபடி..."த்யாகயோகீ! இந்த நாட்டில் தற்போதிருக்கும் அரசரின் பிதா இவர் என்று இதோ வரைந்திருக்கிறது பாரப்பா" என்று அழுத்தமாகக் கூறினார்.

அதன் பிறகுதான் மிருநாளினி தனது பெருந் தவறுதலை உணர்ந்துகொண்டு திடுக்கிட்டு குருதேவரை நோக்கி மன்னிப்புக் கோருவதுபோல் பார்த்தாள். மெல்ல சமாளித்துக் கொண்டு குருதேவர் காட்டிய தைரியத்தினால் மறுபடியும் உருவப்படத்தைப்

பார்த்தாள். "எனது பாட்டனார் இவரா...என்பிதாவைப் பெற்ற மகானுபாவரா..."...என்று புதிய உணர்ச்சியுடன் படத்தையே பார்த்தவாறு சில நிமிஷங்கள் தன்னையே மறந்தாள்.

பிறகு அவளுக்கோர் யோசனை தோன்றியது. அங்குள்ள காவல்காரனை நோக்கி "ஏம்பா! ராஜா சத்திரம் என்று பெயர் போட்டிருக்கிறதே. இதில் தினம் ராஜா வருவாரா"...என்று ஒன்றுமே தெரியாததுபோல் கேட்டாள்.

வேலைக்காரன்:—(கடகடவென்று சிரித்துவிட்டு)...குட்டிச் சாமியாரே...ராஜா சத்திரம் என்றால் ராஜாவே வந்துதான் சாப்பாடு போடுவாங்கன்னு நெனச்சியா....சில பொதுஜனங்கள் தமது சொந்த பணத்தில் சத்திரம் கட்டி தர்மம் செய்வாங்க. சில சத்திரம் ராஜாவே நேராகத் தம் பணத்தைப் போட்டுக் கட்டுவார். இந்த சத்திரம் யாத்ரீகர்கள் வந்து தங்கி ஊரைப்பார்த்து விட்டுப் போவதற்காக ஏற்பட்டிருக்கிறது. இதில் பெரியபெரிய மனிதர்கள்தான் தங்கலாம். மற்றவர்கள் கூடாதென்று சட்டம்.

மிரு:—அப்படியா!...ஆண்டிப் பரதேசியாய் ஊர்சுற்றுகிறவர்களுக்கு என்ன விஷயம் தெரியுமப்பா...அதோ இருக்கிறதே அதென்ன புத்தகம்?

காவல்:—அதுவா?...அரசாங்கத்தின் பரம்பரையை அறிவிக்கும் சரித்திரப் புத்தகம். அதைத்தான் சகலரும் படித்து சரித்திரம் அறிவார்கள்.

மிரு:—இப்படிக் காட்டமுடியுமா? நானும் பார்த்துவிட்டுத் தருகிறேன்...என்றாள். காவல்காரனும் இசைந்து ஒரு புத்தகத்தைக் கொடுத்தான்.

மிருநாளினி வெகுவெகு ஆவலுடன் புத்தகத்தைப் பிரித்தாள். வரிசைக்ரமமாக அரசகுடும்பத்தினரின் படங்கள் ப்ரசுரித்திருந்ததைக் காணக்காண அவளுடைய ஆனந்தம் பெருக்கெடுத்தது. தற்காலம் பரிபாலனம் செய்யும் அரசர் பெருமான் என்று எழுதியிருக்கும் படத்தைப் பார்த்ததும் உண்மையில் புதையல் கண்டதனம்போலும், மலடி வயிற்றில் மகவு பிறந்ததுபோலும், பிறவிக்குருடனுக்குக் கண்பார்வை திடீரென்று தெரிந்துவிட்டது போலும் உணர்ச்சி மிகுந்து தன்னை மீறிய வேகத்துடன்...."குருஜி!...இதோ! இதோ! என்னருமை பிதா...என்னருயிர் பிதா"...என்று அலறினாள்.

நல்லவேளையாக அப்போது பக்கத்தில் இதரர்கள் யாருமில்லை. குருதேவருக்கு மிருநாளினியின் அளவுகடந்த உத்ஸாகத்தின் போக்கு விபரீதத்தில் கொண்டுவிடுமோ என்கிற பயமே உண்டாகி விட்டது. ஆனால் அவளுடைய பூரிப்பும் துடிதுடிப்பும் கண்டு சந்தோஷமும் அடையாமலில்லை. ஒரு நாட்டின் இளவரசியாய் எழடுக்கு உப்பரிகையில் ஜம்மென்று அதிகாரத்துடன் தாதிமார்கள் புடைசூழ ஸிம்மாஸனத்தில் வீற்றிருக்கவேண்டிய சிறுமி கேவலம் ஒரு காட்டுவாஸியாய் நாட்டின் வளத்தைக் கண்ணால்கூடப் பார்க்காமல் துறவியாய்க் காலம் தள்ளும் நிலைமையில் தன் சொந்தப்

பிறப்பின் மர்மத்தைத் தெரிந்துகொண்டு பெத்தபிதாவையும் பார்த்துவிடும்போது அவளுடைய உத்ஸாகத்தை, உணர்ச்சி வெள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியுமா? என்கிற வியப்பும் அவர் இதயக் கடலில் அலைபோல் எழுந்து மோதியது.

மெல்லிய குரலில் "த்யாகு! நீ உன்னை மறந்துவிடுகிறதில் வீண் கஷ்டங்களுக்கு இலக்காகி அவஸ்தைப் படநேருமோ என்று பயமாக இருக்கிறது. உன் தாயார் ஏற்கெனவே பயந்தவாறே உன்னை அனுப்பிபதை நீ மறக்கக் கூடாது. என்ன விதமான உணர்ச்சியையும் நீ சற்று கட்டுப்படுத்திக்கொள்ளா விட்டால் உன்னுடைய மனோரதம் ஈடேறாது விபத்தில் கொண்டு விட்டுவிடும். சாந்தத்தை இழக்காமல் நிதான புத்தியுடன் யோசனையுடன் படித்துப் பார்த்து இதயத்திற்குள்ளேயே பெருமையை அனுபவிக்க வேண்டும். ஜாக்ரதை' என்று எச்சரித்தார்.

மறுமுறையும் தன்னுடைய மகத்தான தவறுதலை எண்ணி விசனித்து மன்னிப்புக் கோரியவாறு மேலும் விடாது பார்க்கவும் படிக்கவும் ஆரம்பித்தாள். அவளுடைய பிதாவின் முகத்தைப் பார்க்கப்பார்க்க அவளுடைய ஆசைக்கனல் ஜ்வாலைவிட்டு எரிய வாரம்பித்தது. தன் பிதாவின் பக்கலில் தற்போதிய ராணி உட்கார்ந்துள்ள மற்றொரு படத்தைப் பார்த்ததும் தன் தாயாருக்கு அளிக்க வேண்டிய ஸ்தானத்தை மற்றொருத்திக்கு அளித்திருக்கும் அக்ரமக் காக்ஷி அவள் ஆத்திரத்தைக் கிளறிவிட்டது

கண்களில் தீப்பொறி பறக்க அந்த படத்தை ஆக்ரோஷத்துடன் பார்த்தாள். "என் தாயாருக்குத் தாதியாக வந்த ஓர் பைசாசமா என் தாயின் உயர்ந்த ஸ்தானத்தையே பிடித்துக்கொண்டுள்ளது. ஆகட்டும்; சத்தியத்திற்கு என்றும் அழிவில்லை. ஜெயம் உண்டு என்பது நிஜமாயின் இதே இடத்தில் என் தாயை உட்காரச் செய்து என் கண்கள்குளிரக் காண்பேன். இல்லையேல் என்னுயிரையே மாய்த்துக்கொள்வேன்" என்றுதனக்குள்தான் கடுமையாக சபதம் செய்துகொண்டாள்.

பிறகு சகல படங்களையும் பார்த்துவிட்டு அந்த நகரசரித்திரம், ராஜ பரம்பரையின் வரலாறு, எக்தெந்த காலங்களில் எப்படி எல்லாம் அரசாக்ஷி நடந்துவந்தது என்ற பல விஷயங்களையும் படித்து அறிந்துகொண்டாள். சில தலைமுறைக்கு முன்பு எதிரி இந்த தேசத்தின் மீது படையெடுத்து வந்த சமயம் ராஜ குடும்பத்து வீரமங்கை போர்க்கோலம் பூண்டு போர் புரிந்து வெற்றி பெற்றதாக வரைந்துள்ள சரிதையைப் படித்தும் அந்த வீராங்கனையின் உருவச்சிலையைப் புத்தகத்தில் கண்டும் ப்ரமிப்பும் பூரிப்புமடைந்து அந்த வீர வனிதையின் சமாதியை நேரில் போய்க் காண மகத்தான ஆசை கொண்டு அதை குருநாதரிடம் தெரிவித்தாள்.

குரு:—உன்னுடைய ஆசையைப் பூர்த்தி செய்வதற்கு இந்த வேஷமும் ப்ரயாணமும் ஏற்படாகியிருக்கிறதேயன்றி வீணாகச் சுற்றுவதற் கல்ல. அங்கும் நீ உன்னுடைய உணர்ச்சியை நினைவு

மீறிக் காட்டி தர்ம சங்கடமான நிலைமைக்குக் கொண்டு வந்து விடாதே. எதுவாயினும் இதயத்திற்குள்ளே வைத்துக்கொண்டு சாமர்த்தியமாக நடந்து கொள்ளும். உம். கிளம்பு போகலாம்" என்று கூறி அழைத்துச்சென்றார். இருட்டிலேயே இருந்தவளை அபாரமான வெளிச்சத்தில் கொண்டுவிட்டால் எத்தகைய ப்ரமிப்பும் திகைப்பும் உண்டாகுமோ, அப்படியே மிருநாளினிக்கு கட்டுக் கடங்காத ஆனந்தம், வியப்பு, உத்ஸாகம எல்லாம் ஒன்றுகூடி அவளைத் திகைக்க வைத்துவிட்டது.

15

ப்ரம்மாண்டமான ஆச்ரமத்தில்,—மிருநாளினியும் குருநாதரும் எங்குபோனார்கள், எதற்குப் போனார்கள், என்ன நடந்தது என்கிறதெல்லாம் சற்றும் அறியாத ஆச்ரமத்து வாஸிகள் தமக்குள்ளேயே குழம்பினார்கள். பூஜாரிணியின் எல்லையற்ற கவலையின் விஷயமே அறியாத ப்ரேமாவதிமட்டும் ஏதோ ஒரு மகத்தான விஷயம் நடந்திருக்கவேண்டும் அல்லது பரமரகஸியமான செய்தி ஏதோ வெளியாகி இருக்கவேண்டும்; இல்லாவிடில் இம்மாதிரி இம்மூவர் மட்டும் தனித்துக் கூடிக்கூடி பேசமாட்டார்கள். உம்.. ஒன்றுக்கும் உதவாத குருடியை லக்ஷியம்செய்து யார் எதைச் சொல்வார்கள், என்று தனக்குத்தானே நினைத்து மிக்க விசனத்தையடைந்தாள்.

பூஜாரிணிக்கோ, ஒரேபிடிவாதமாகச் சென்றுள்ள தனது குமாரத்தியின் மீதே நினைவுகொண்டு அதே ஏக்கம் பிடித்துவிட்டது. ஒருவராலும் ஒருவிதமான தீங்கும் நேராதிருக்க வேண்டுமே என்கிற திகில் வேறு வாட்டுகிறது.

ஆச்ரமத்தை அழகுபட நடத்தும் முறையில் எத்தகைய மாறுதலும் காணக்கூடாது, சந்தேகத்திற்கு இடமும் கொடுக்கக் கூடாது, என்கிற எண்ணத்துடன் வெகு ஜாக்ரதையாகத்தான் நடந்துகொண்டார்கள். அன்று சங்கீதவகுப்பில் ஆநந்த பைரவி ராகத்தில் கீர்த்தனமும் அந்த ராகத்தின் மகிமையைக்குறித்த பேச்சும் நடத்த வேண்டும். பூஜாரிணியின் மனக்கலக்கத்தைச் சற்று மறந்திருப்பதற்காகத் தானே அந்த பகுதியை நடத்த முன்வந்தார்கள்.

"அன்புமிக்க மாணவிகளே! ஆனந்தபைரவி ராகத்தின் அத்புத வசீகரத்தை இத்தனைநேரம் அனுபவித்தீர்கள். மக்கள் மனக் கவலையினாலோ புத்தி சுறுசுறுப்பற்ற நிலைமையினாலோ சோர்வுற்றிருந்ததால், அந்த நிலைமையை மாற்றி மனத்திற்கு உத்ஸாகத்தையும் சுறுசுறுப்பு ஆனந்தம் இவைகளையும் கொடுக்கும் அபார சக்திவாய்ந்தது சங்கீதம். அதிலும் சில ராகங்கள் மக்களைத் தட்டி எழுப்பி மனோகரமான சக்தியைக் கொடுக்கும் அபூர்வ வசீகரம் பெற்றதாகும். அவற்றில் ஆனந்தபைரவி ராகமும் ஒன்றாகும். இத

யத்தைத் துளாவி இணையற்றகருணையைச் சுரக்கச் செய்யும் ஆனந்தபைரவி ராகத்தில்தான் அம்பிகையின் மீது அதிகமான பாடல்களைப் பக்தர்கள் பாடியிருக்கிறார்கள். இப்போது நீங்கள் பாடிய. "ஓ ஜகதம்பா....நீமதித்ஸல்லக...அம்பாநின்னுநேர நம்மிதி ஆநந்தபைரவி...அகிலாண்டநாயகி...முதலிய பாட்டுகள் அம்பாளைப் பற்றியதேயாகும். மானஸகுருகுக...ஸத்பக்தியுகல்கஜேஸி...முதலிய பல கீர்த்தனங்கள் உண்டு.

இந்தராகத்தின் அபாரமான சக்தியைப்பற்றி பெரியவர்கள் ஒரு உதாரணக் கதைகூட சொல்வதுண்டு. அதாவது...முதல் முதல் கல்யாணதம்பதிகள் மாலைமாற்றிய உடனே ஊஞ்சலில் உட்கார வைத்ததும் ஆனந்தபைரவி ராகத்தில் கன்னி ஊஞ்சல் ஆடினாளேமீனாக்ஷி....என்ற பாட்டைத்தான் அனேகர் சம்பிரதாயமாகப்பாடி தம்பதிகளை ஆனந்தத்தில் திளைக்கச் செய்வது வழக்கம். அதே சம்ப்ரதாயமாய் பலர் நாளையும் செய்து வருவதைக்காணலாம். தம்பதிகளுக்கு நலங்கிடும் சடங்கை முடிப்பதற்கு பெண்ணும் பிள்ளையும் ஆனந்தபைரவி ராகத்தில்தான் பத்யம் என்கிற ஒரு வகைப்பாடலைப்பாடி முடிப்பது வழக்கம்.

ஒரு ஜமீந்தார் வீட்டில் கல்யாணம் நடந்தது. அந்தக்கல்யாணப் பெண்ணை வேறொருவர் வீட்டில் மணக்க ஏற்பாடு செய்திருந்தார்களாம். அது சிலகாரணங்களினால் நின்றுவிட்டதும் வேறுஇடத்தில் கல்யாணம் நிச்சயமாகி நடப்பதைக் கண்டு முதலில் ஏமாந்தவர்கள் பொறாமை கொண்டு எப்படியும் கல்யாணத்தில் எதிர்ப்பை உண்டாக்கி நிறுத்திவிடவேண்டும், அல்லது, கலகத்தையாவது உண்டாக்கி விடவேண்டும் என்று பொறாமையுடன் முன்னேற்பாடுகள் செய்திருந்தார்களாம். முதல்முதல் கன்னிமாலை மாற்றி ஊஞ்சலாடும்போது இவர்களே தயார் செய்திருந்த சிலர் முன்னதாக முந்திக்கொண்டு முகாரி ராகத்தில் லாலியும் ஊஞ்சலும் பாடச் செய்தார்களாம்.

அங்கிருந்த பெரியோர்களுககு இச்செய்கை மிக்க அபசகுனமாகத் தோன்றியதால் பாடுபவர்களை நிறுத்தும்படிக் கூச்சலிட்டார்கள். பிள்ளைவீட்டுக்காரர்களுக்கு இது மிக்க மன அதிர்ச்சியை உண்டாக்கி அபசகுனியைப்போல் இந்த பலாக்கண ராகத்தை யார் பாடச் செய்தது? என்று அவர்களும் கோபித்துக் கொண்டு கர்ஜித்தார்களாம்.

"முதல்முதல் ஊஞ்சலில் உட்கார்ந்ததும் இதையா பாடுவது? இது வேண்டுமென்றுதான் செய்துள்ள சதி. அவமானம் அபசகுனம்"...என்று கத்துவதை மணையில் உட்கார்ந்திருக்கும் தம்பதிகள் கேட்டு இடிந்துபோய் விட்டார்களாம். "ஐயோ! இதனால் ஒருவிதத்தடையும் ஏற்படாதிருக்க வேண்டுமே!" என்று பெண்ணின் உள்ளம் உருகி அவள் கண்களில் நீர் நிறைந்துவிட்டதாம்.

கலகக்காரர்கள் பெரிய வெற்றியைக் கண்டதுபோல் கும்மாளமிட்டு உள்ளுக்குள் பூரித்தார்களாம். அதேசமயம் அந்த மணமகள் வீட்டிற்கு தூரத்து பந்துவும் மிக்க ஏழையுமான ஒரு பெரிய சுமங்கலிப் பாட்டியம்மாள் தன் சகல பந்துக்கள் வீட்டிலும் முதல் முதல் ஊஞ்சல்பாடி அதற்கான மரியாதையைப் பெறும்வழக்கம். அதேபோல் அந்தம்மாள் ஊஞ்சல் பாடத் தொடங்கிப் பாடிக் கொண்டே இருந்தாள். இரண்டு காதும் டமாரச் செவிடியாதலால் அந்தம்மாளுக்கு இந்த முகாரிராகத்தின் விபரீதம் ஒன்றுமே கேட்கவில்லை.

இந்த கலவரத்தில் முதலில் அதை யாரும் கவனிக்கவில்லை. பிறகு மணமகனே இதை கவனித்து மனத்திற்குள் மகிழ்ந்தவாறு மனைவியை நோக்கி "இதோ பாட்டியம்மாள் சம்பிரதாயப்படி பாடுகிறார்கள். இன்பமும் துன்பமும் இரவும்பகலும் என்பதுபோல் இன்று நடந்துவிட்டது. இனி கவலைப்படாதே" என்று கூறி அவளைத் தேற்றியதோடு தானே உரத்த குரலில் "இதென்ன கூச்சல் ...பாட்டியம்மாள் ஊஞ்சல் பாடுவதைக் கேட்காது வீணாகக் கலவரம் செய்கிறீர்கள்?" என்று கத்தியதும் எல்லோரும் அடங்கி விட்டார்கள்.

முகாரி ராகக் கூட்டத்தினரின் எக்காளமும் நகைப்பும் திடீரென்று அடங்கி மறுபடியும் கவலையில் தோய்ந்து முகாரிராகத்தின் ரஸபாவத்திலேயே கலந்தது. புரோகிதர் இந்த கலவரத்தைக் கண்டு முன்னால் வந்து..."சபையோர்களே! இங்கு திடீரென்று முகாரி பாடப்பட்டதைக் குறித்து எவரும் வருந்தவே வேண்டாம். ஏனெனில் சகுன சாஸ்திரத்தை நன்றாக அறிந்தால் அதன் உண்மை நன்கு புலப்படும். சகுனம் என்பது திடீரென்று முதலில் கண்ணில் எது படுகிறதோ, காதில் எது விழுகிறதோ அதுதான் சரியான சகுனம். புறப்படுவதற்கு முன்பு வீதியில் போய் நின்று ஒரு நாழிகை பார்த்துக் கொண்டு சுப சகுனமா, அபசகுனமா; என்று பார்ப்பது ஒரு அறியாமை கலந்த வழக்கம். முதல் முதல் எது தட்டுப்படுகிறதோ அதுதான் பலனை அளிக்கும். அதுபோல் தம்பதிகளை அழைத்து வருவதுமுதல் மேளமும் பாண்டும் ஆநந்த பைரவியை விடாது வாசிப்பதை நீங்கள் மறக்கக்கூடாது; அதோடு குடும்பத்தின்சம்பிரதாய பாடகியான செவிட்டு ஸீதம்மாள் தம்பதிகள் ஊஞ்சலில் அமரும்முன்பே பாட ஆரம்பித்ததை நானேகேட்டேன். என்போல் பலரும் கேட்டிருப்பார்கள். இந்த முகாரி ராக விஷமிகளின் செய்கைக்கு அவர்களே வருந்தி முகாரி பாடிக் கொண்டதுபோலாகிவிட்டது. ஆகையால் கவலையே வேண்டாம்." என்று ஒரு ப்ரஸங்கத்தைச் செய்து பிறகு அந்த கல்யாணத்தை நடத்தினர்- தம்பதிகள் ஆநந்தமாக வாழ்க்கை நடத்தினர்கள்.

இத்தகைய முக்யமான கருத்துக்களை முன்வைத்துத்தான் நம் பெரியவர்கள் எந்தெந்த ஸமயத்தில் எந்தெந்த ராகங்கள் பாடவேண்டும், எது எத்தகைய ரஸத்தைக் கொடுக்கக்கூடியது என்பதை

யறிந்துதான் நலங்கு, ஊஞ்சல், எண்ணெய்தேய்க்கும் பாட்டு, பத்யம், லக்ஷ்மீகல்யாணம், ஆனந்தமானந்தம்....ஓடம், எச்சரிக முதலிய எந்த சுபசடங்கு பாடல்களையும் ஊன்றிக்கவனித்துப்பாருங்கள். மங்களகரமான ராகந்தான் அமைத்திருக்கிறதேயன்றி தக்ககரமான ராகத்தைப் பெரியார் அமைக்கவில்லை. குரஞ்சி ராகத்தில்தான் எண்ணெய்தேய்க்கும் பாடல் அமைத்திருக்கிறார்கள். பத்யம், ஊஞ்சல், முதலியன-ஆநந்தபைரவி. எச்சரிக்க-ஆசாவேரி. ஓடம்-புன்னாகவராளி மங்களங்கள் பெரும்பாலும், மத்யமாவதி, ஸௌராஷ்ட்ரம், சுரட்டி, பந்துவராளி முதலிய ராகங்களில்தான் அமைப்பார்கள்.

கோயிலில்கூட ஸ்வாமியின் கைங்கர்யார்த்தம் தேவதாசிகள் சூர்ணிகை பாடுவார்கள். அவை அனேகமாய் ஆரபி, தேவகாந்தாரி முதலியவைகளில்தான் பாடுவார்கள். ச்லோகங்கள் பெரும்பாலும் காம்போதியும் சங்காபரணமுமே பாடுவார்கள்.

சங்காபரணத்தின் மகிமையை நாளையதினம் சொல்கிறேன். காலத்தையும், சுப சடங்குகளின் விவரத்தையும் அனுஸரித்துத்தான் ராகங்களை அமைக்கவேண்டுமேயன்றி காதுக் கினிமையை மட்டுமோ, அல்லது பாடுகிறவர்களின் இஷ்டத்தை உத்தேசித்தோ ராகங்களைப் பாடக்கூடாது. சுபமான ராகங்களை அமைத்து விட்டால் மட்டும் போதாது. மங்களகரமான பதங்களை உடைய சாஹித்யங்களைப் பொருத்திய பாடல்களைத்தான் முக்யமான சுப காரியங்களுக்குப் பாடலாமேயன்றி கண்ட சாஹித்யங்களையும் பாடக்கூடாது என்பதையும் நீங்கள் தெரிந்துகொண்டு பாட வேண்டும்”

என்று பூஜாரிணி வெகு அருமையாய் இசைஇசைப்பது போலவே பேசியதைக்கேட்ட மாணவிகளின் உள்ளங்களில் சந்தோஷம் நிரம்பி ஆரவாரம் செய்தார்கள். எப்படியாவது தன்னுள்ளத்தில் கொந்தளிக்கும் சோகத்தையும் பயத்தையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாது கடமையைச் செய்துவிட்டு மறுபடியும் தனது தனிவிடுதிக்கே சென்று படுத்தாள். எண்ணம் பூராவும் ஆனந்தபுரியின் அழகிலும் அங்கு சென்றுள்ள ம்ருநாளினியின் மீதும் சென்று மனம் கலங்குகிறது. கடவுளை வேண்டிக்கொண்டே சடலம் கிடந்தது-

16

ம்ருநாளினியும் குருதேவரும் முன் குறிப்பிட்ட சமாதியிருக்கும் பெரிய தோட்டத்திற்குச் சென்றார்கள். அந்த தோட்டத்தில் இல்லாத பழவகைகளும் இல்லை, புஷ்பவகைகளும் இல்லை. அழகுக்கு அழகு செய்ததுபோல் ஆனந்த உணர்ச்சியை அள்ளி வீசும் அச்சுந்தர உத்யானவனத்தின் நடுமத்தியில் பளிங்குக் கல்லினால் ஒரு வீரமணியின் அதிஸௌந்தர்ய சோபிதமான உருவம் சிறுத்தப்பட்டு அதைச் சுற்றிலும் செயற்கையழகுகளால் அதிஅத்புத

மான சிங்காரம் செய்திருந்ததைப் பார்க்க இவர்களுடைய தேகம் சிலிர்த்து ஆனந்த உணர்ச்சி உச்சத்தையடைந்து நிர்த்தனம் செய்தது.

"இந்த உத்தமியின் மாபில் பிறந்தவளா நான்! இந்த த்யாகப் பதுமையின் சரீரத்தில் ஓடும் ரத்தமல்லவா என்சரீரத்திலும் ஓடு கிறது. தாயே! புனிதவதி! என் வம்சத்தின் வாரிதியே"! என்று தனக்குள் தன்னை மீறிய ஆனந்தத்துடன் எண்ணி அச்சிலையையே உற்றுக் கவனித்தபடியே இவளும் ஒரு பதுமைபோல் நின்றாள்.

கட்டுமீறிய உணர்ச்சி வேகத்தில் ஏதாவது உளறிவிடப் போகிறாளே என்கிற பயத்துடன் குருதேவர் மிருநாளினியையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். மிருநாளினி அச்சிலையின் கால்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தன் சிரசை கால்களில் பதித்து வணங்க எத்தனிப்பதையறிந்த குருதேவர், "அப்பா த்யாகு! அரசியின் சிலை யருகில் உட்காரக்கூடாது. உன் செய்கையைப் பார்த்தால் உட்கார்ந்து ச்ரமபரிகாரம் செய்துகொள்வாய் போல் தோன்றியதால் சொல்கிறேன்." என்று ஜாடையாகக் கூறி எச்சரித்த பிறகே, தான் ஒரு ஆண் உடையில் சன்யாசியின் கோலத்திலிருப்பது நினைவுக்கு வந்ததும் சடக்கென்று சமாளித்துக் கொண்டு கீழே ஏதோ விழுந்துவிட்டதாயும் அதைத் தான் எடுத்துக் கொள்ளக் குனிந்ததாயும் ஒருசால்ஜாப்புக்காட்டிவிட்டாள்.

ஆனால், அந்த-குல தெய்வம்போன்று நிற்கும் சிலையை விட்டு அவளுடைய கண்களையோ இதயத்தையோ எடுக்கவே முடியவில்லை. அந்த த்யாக தேவியின் சரிதையைப் படிக்கப் படிக்க இவளுடைய குலப்பெருமையில் உள்ளம் மூழ்கிப் புளகித மடைந்தது. தானும் இவ்வம்சத்தில் பிறந்தவளாயிற்றே? தனக்கும் இத்தகைய அழியாப் புகழும் கீர்த்தியும் கிடைக்குமா? என்கிற அதீத எண்ணமே உண்டாகியது.

வெகுநேரம் அச்சிலையைப் பார்த்தவாறு அந்தப் பூங்காவிலேயே அன்றைய பொழுதைக் கழித்தார்கள். மிருநாளினியின் உணர்ச்சிப் பெருக்கு கட்டுமீறிப் பொங்குவதைக் கண்ட குருநாதருக்கு உள்ளூறச் சற்று பயமே எடுத்துக்கொண்டது. இந்த சுற்று வட்டாரங்களையும் வம்சத்தின் பெரியார்களின் படங்கள் சிலைகள் இவைகளையும் பார்க்கும்போதே இவள் இத்தகைய உணர்ச்சியை அடையும்போது, தன் பிதாவின் அரண்மனையையும் பிதாவையும் நேரில் பார்த்துவிட்டால் எப்படியாகிவிடுவாளோ? குட்டு வெளியாகி விடுமாயின் எடுத்த காரியம் சகலமும் வீணாகி பேராபத்தில் வந்து நிற்கும்—என்கிற கவலை குருநாதரின் உள்ளத்தில் பலமாக எழுந்து போராடியதால் அவர் மிருநாளினியை தனியிடத்திற்கு அழைத்துச் சென்று, "குழந்தாய்! உன்னை நான் ஊன்றிக் கவனித்து வருகிறேன். உன்னுடைய உணர்ச்சியைக் கட்டுப் படுத்த உன்னால் முடியவேயில்லை. அம்மாதிரி செய்கையினால் நீ நினைத்துள்ள லக்ஷ்யங்கள் முற்றிலும் பாழாகிவிடும் என்று எனக்குப் பயமாகவே இருக்கிறது. ஆகையால் இதோடு நாம் ஊருக்

குத் திரும்பலாமா என்பதற்குள் மிருநாளினி இடைமறித்து "ஸ்வாமீ! தயவு செய்து தாங்கள் இவ்வெண்ணத்தை மாற்றிவிட வேண்டும். இனி நான் ஒரு போதும் தங்கள் மனத்தை நோகச் செய்யவே மாட்டேன். ஜாக்ரதையாக நடந்துகொள்கிறேன்: தங்களுக்கு அத்தகைய பயமே வேண்டாம். குருநாத! என்னுடைய ஆசையைப் பூர்த்திசெய்வதாக வாக்களித்துள்ளதை மறக்கக்கூடாது. தாங்கள் இந்த ஆசையைப் பூர்த்தி செய்யாது நிராசையாக்கிவிட்டால் அந்த அதிர்ச்சியிலேயே என் ப்ராணன் போய்விடும். பிறகு வருந்திப் பயனில்லை. என் ப்ராணன் போனுல் என் தாயாரின் உயிரும் தரிக்காது. சகல அம்சங்களிலும் காரியம் கெட்டுப் பாழாகிவிடும். ஆகையால் என்னுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்யுங்கள். நான் வெகு ஜாக்ரதையாக நடந்து கொள்கிறேன்; இது சத்யம்." என்று கண்ணீர் பெருக, ஆவல் பொங்கக் கூறிக் கெஞ்சினுள்.

அதற்கு மேலும் தடங்கல் சொல்லமுடியாது குருநாதர் சற்று மவுனமே சாதித்தார். "குழந்தாய்! உன்னிஷ்டப்படியே இன்னும் இரண்டு நாட்களுக்கு இந்தவூர் முற்றிலும் சுற்றிப்பார்த்துவிட்டுப் புறப்பட்டுவிடவேண்டும். அதற்குமேல் தாமதம் செய்தால் நம் குருகுலத்தின் காரியங்களுக்குத் தடங்கல் ஏற்பட்டுவிடும். அதோடு உன் தாயின் கவலை அதிகரிக்கும். குருகுலவாஸிகளுக்குச் சற்று சந்தேகம் உண்டாகிவிடும். இவைகளுக்கு இடமளிக்காமல் நாம் ஜாக்ரதையாக நடந்துகொள்ளவேண்டும்." என்று எச்சரித்தார். மிருநாளினி இம்மட்டுமாவது குருநாதர் ஒப்புக்கொண்டதற்காக மிகவும் மகிழ்ச்சியை அடைந்து பூரித்தாள்.

சத்திரத்தில் இரவு தங்குவதும் பகல் ஊர் சுற்றுவதுமாகவே இவர்கள் இருப்பதால் அன்று இரவும் சத்திரத்தில் வந்து படுத்தார்கள். மிருநாளினியின் பாதுகாப்பிற்காக குருநாதரும் சிஷ்யரும் மாறிமாறி கண்விழித்துக் காவல்காத்தார்கள்.

அன்று ஊர்சுற்றிய அலுப்பினுல் மிருநாளினி தூங்கிவிட்டாள். மணி சரியாக 12-ஆகிவிட்டது. சிலவுகாயும் பெரியமுற்றத்தில் சத்திரத்து சமையல்காரர்கள், வேலையாட்கள் முதலிய எல்லோரும் தம் தம்வேலைகளை முடித்துக்கொண்டு வந்து படுத்தார்கள்.

சமையல்காரன்:—டேய் கந்தப்பா! வாசல்கதவு, பின்புறத்துத் தோட்டத்துக்கதவு எல்லாம் போட்டாயிற்று? இன்று சத்திரத்து மணியக்காரர் வந்து ஒரு ரகசியமான சமாச்சாரத்தை வெடிகுண்டு வீசுவதுபோல் வீசியிருக்கிறுர். அதனுல் ஜாக்ரதையாக இருக்கவேண்டும்........

கந்தப்பன்:—என்ன சமாச்சாரம் சாமீ! சொல்லுங்க. பயமாயிருக்குதே!....

சமை:—உம்! நாம் பயந்து என்ன ஆகப்போகிறது? நம்முடைய அரசனின் பலவீனத்தை நாம் அறியவில்லையா? ஜெயபுரி மகாராஜாவிற்கும் இந்த தேசத்திற்கும் எப்போதும் உள்ளூறப் பகை

உண்டு. ஆனல் வெளிக்கு என்னவோ உறவும் கொண்டாடுகிறார்கள். நம் அரசர் சதா இசைப்புயலில் இன்புற்றுத் தன் கடமைகளை மறந்திருப்பதால் ப்ரஜைகளுக்கு அவரிடம் அதிக நம்பிக்கையோ, மதிப்போ இல்லாது குறைந்தே வருகிறது என்பதை அந்த எதிரி எப்படியோ அறிந்து சில ஒற்றர்களை இங்கு அனுப்பி இந்த ரகசியத்தின் உளவை அறிந்துவரும்படியாகச் செய்திருக்கிறானும். நாளுக்குநாள் இந்த புகார் அதிகரித்துவருவதை அரசாங்கத்து அதிகாரிகள் அறிந்து இதைக் கண்டுபிடிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யத் தீர்மானித்திருக்கிறார்களாம். சத்திரத்தில் சாப்பிடவருகிறவர்களை எல்லாம் கவனித்துக்கொள்ளவேண்டுமாம். சிலரை சோதனையும் போடவேண்டுமாம்......

முருகப்பன்:—சாமீ! சாமீ! இன்னொரு ரகஸியம். நான் இதை நேற்றே சொல்லவேண்டும் என்று எண்ணினேன். சமயம் சரிப்படவில்லை. நம்ம சத்திரத்தில் சாமியார்கள் மூவர் வந்திருக்கிறார்களே; அவர்களைப் பார்த்தாலே எனக்குப் பெரிய சந்தேகமாயிருக்குதுங்க. அதிலும் ஒரு குட்டிச்சாமியார் அவர்களுடன் இருக்கிறார். அந்த ஆசாமியைப்பார்த்தால் ஆம்பிள்ளைமாதிரியே எனக்குத் தோணலே. நம்பதோட்டக்கார ரெங்கசாமிகூட அப்படித்தான் என்னெக்கேட்டான். பொம்பிள்ளைக்கு ஆண்வேசம் போட்டுக்கிட்டு இவங்க ஏன்வரணும்னு எனக்கே தோணிச்சுங்க...

சமை:—அடப்பாவி! அதையப்பவே என்னிடம் சொல்லியிருக்கக்கூடாதா! நம்பமணியகாரரிடம் நான் காட்டியிருப்பேனே. இப்போ அவர்களை எங்கே தேடுவது?

முருக:—அவங்களை எங்கேயும் தேடவாணுங்க. இந்த சத்திரத்திலேதான் ராத்திரியே வந்து படுத்துக்கிட்டு கொரட்டை உட்ராங்க. தூங்கி எயுந்திருக்கும்போதே நான் மடக்கிப்புட்றேன்; ஆனா, இந்தவிஷயம் அவங்க காதுக்கு எட்டக்கூடாது.

சமை:—ஏண்டா! பெண்பிள்ளையா சாமியார் வேஷத்துலே வந்திருக்கிறாள் என்றாய்! அப்படி எதற்காக வரவேண்டும்? தனக்கே தான் எவராவது பேராபத்தைத்தேடிக்கொள்வார்களா? இதில் எனக்கு ஏதோ விபரீதமான சந்தேகம் உண்டாகிறது. எதற்கும் காலையில் நீ முதலில் உஷாராக என்னைக் கூப்பிட்டுக் காட்டு...

கிணறுவெட்டப் பூதம் கிளம்பியது என்பார்கள். அதுபோல் ஏற்கெனவே குருநாதர் இந்த விஷயத்தில் மகத்தான கலவரமும் பயமும்கொண்டு தவித்தவாறு தூங்காது புரண்டுகொண்டே படுத்திருந்தார். தூக்கம் கொள்ளாததால் மெல்ல எழுந்து அப்படி இப்படி விதிப்பக்கமுள்ள வாராண்டாவில் உலாவலாம் என்று எழுந்த சமயம், இங்கு ஏதோபேச்சுக்குரல் கேட்டதோடு சந்தேகம்...மணியகாரர்...எதிரி...ஒத்தன் என்ற சில பதங்கள் காதில் விழுந்ததால் மறைவான இடத்திலிருந்து, இச் சம்பாஷணையை கேட்டதுதான் தாமதம்...அவருக்கு அப்படியே தட்டா மாலைசுற்றுவது போல் ஒரு அதிர்ச்சி உண்டாகி தலைசுற்றிக் கீழேதள்ளியது.

காந்தி கீர்த்தனம்

கதா காலக்ஷேபம்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

சென்ற இதழ் தொடர்ச்சி

13. சுதந்தரப் போர்

சுதர்மம் கெட்டு, சுராஜ்யமும் இல்லாமல், ஆண்மை யழிந்து அடிமைக் குழியில் ஆழ்ந்து கிடந்த இந்தியரை எழுப்ப எழுந்தனர் மராடிய வீரர். நான சாகெபு, தாந்தியாதோபி, ராணி லக்ஷ்மீபாய், குமாரசிங் இவர்களெல்லாம் இந்துக்களையும் முஸல்மான்களையும் ஒன்றுகூட்டி, இரகசிய தூதர்கள்மூலம் சிப்பாய்களை வசப்படுத்தி, சேனை சேர்த்து சுதந்தரப்புரட்சி செய்தனர்.

ராகம் நந்தலவராளி—ஏக தாளம்

சுதர்மமும் சுராஜ்யமும்
சுதேசமும் செழிக்கவே
அதர்மத்தை அழிக்கவே
அணி வகுத்து வாருங்கள் (சுதர்)

அன்னியர் நம் அன்னையை
அடிமையாக்கப் பார்ப்பமோ
மின்னு வாளை வீசுங்கள்
விடுதலையா வேசத்தால் (சுதர்)

ஹர ஹர மஹாதேவா
ஹர ஹர மஹாதேவா
பரதர்மம் ஒழிகவேநம்
பாரதாத்மா வாழ்கவே (சுதர்)

இந்தமாதிரி சுதர்மவீரருடன் நானசாகெபும் லக்ஷ்மீபாயும், தாந்தியாதோபியும், அஹமத் மௌல்வியும் கடும்போர்செய்து ஆரம்பத்தில் பெருவெற்றி பெற்றனர். கான்பூர், மீரட், லக்னோ, டில்லி எங்கும் ஆங்கிலேயர் திணறி ஓடினர். டில்லியில் சுதந்தரவீரர் பகதூர்ஷாவை அரியணையில் வைத்து, ஜயகோஷம் செய்தனர். அன்று பகதூர்ஷா ஒரு பொதுநல அறிக்கைவிட்டான். அதன் சாரமாவது:

"இந்து முஸ்லிம்களே! நாம் இருவரும் ஒன்று. முஸ்லிம்கள் இந்நாட்டிலேயே இருப்பவர்கள். இந்த நாட்டுச்சொத்தை ரயிலிலும் கப்பலிலும் மூட்டைக்கட்டிக்கொண்டு போகும் அன்னியர் இனி இங்கே புகுந்து பிரித்தாளமுடியாமல் கவனமாயிருப்போம்.

நமது ஒற்றுமையே சுதந்தரத்திற்கு உறுதி. முஸ்லிம்களே! இந்துக்களுடன் ஒற்றுமையாயிருங்கள். இன்றுமுதல் இந்துக்கள் மனம் நோகும்படி பசுவதை செய்யாதீர்கள். அவரவர் மதத்தை அவரவர் அனுஷ்டிக்கட்டும். அல்லாவே ஹரி,ஹரன்,பிரம்மம். கடவுளுக்கும் மனச்சாட்சிக்கும் உண்மையாயிருந்தால் எல்லாரும் சேர்ந்து வாழலாம்''

இந்த உபதேசம் இந்துமுஸ்லிம் ஒற்றுமையை ஊக்கியது. இந்துக்கள் குரானை மதித்தனர். முஸ்லிம்கள் கீதையையும் ராமாயணத்தையும் மதித்தனர். 1857-ல் நடந்த சுதந்தரப்போர், இந்துமுஸ்லிம் ஒற்றுமையால் எழுந்து சண்டவேகத்தில் பரவியது. ஆனால் வழக்கம்போல துரோகக்கூட்டம் ஆங்கிலேயர்பக்கம் சேர்ந்தது. சீக்கியர்களும், வடநாட்டு ஜமீந்தார்களும் சிற்றரசரும் ஆங்கிலேயருக்கு அடிமைகளாகி, தேசவீரர்களைக் கொலைசெய்ய உடந்தையாயிருந்தனர். அவர்கள் மட்டும் நானுசாகெபுபக்கம் சேர்ந்திருந்தால், போர் வென்றிருக்கும். இன்று சுதந்தர இந்தியாவில் நாம் வாழ்ந்திருப்போம். நானுசாகெபின் சுதந்தரக்கனவும் அற்புதமான ஏற்பாடுகளும், ராணிலக்ஷ்மீபாயின் ஆச்சரியமான தியாகவீரமும், துரோகிகளின் சூழ்ச்சியால் கொடுமையான சோக நாடகமாக முடிந்தன.

ஹாவ்லக்கும், லாரென்சும் நீலும் அசுரத்தனமாக இந்தியரை வெட்டி வெட்டிச் சாய்த்தனர். பதினாயிரக்கணக்கான பேர்களை பீரங்கிவாயில் வைத்துச் சுட்டனர். கிராமம் கிராமமாகத் தீயிட்டு மக்களை அப்படியே வெந்து சாம்பலாகச் செய்தனர். ரஸ்தாக்களெல்லாம் தூக்குமரமாக்கினர்.

சாலையெல்லாம் தூக்குமரம்
சந்தெல்லாம் சுடுகாடு
காலைமுதல் மாலையெல்லாம்
காலனுக்குக் கொண்டாட்டம்

என்றொரு தெம்மாங்குண்டு; அப்படியானது அந்த அற்புதமான எரிமலைப்போர்.

அசுரத்தனமான கொலைக்கருவிகளைக்கொண்டது ஆங்கில ராஜ்யம். நமது பலாத்காரத்தால் அதனிடமிருந்து விடுபட முடியாது என்பதை நானுராயன் சண்டை தெளிவாகக் காட்டிவிட்டது.

இந்தச்சண்டை இந்துமுஸ்லிம் ஒற்றுமையால் நடந்தது என்பதை ஆங்கிலேயர் அறிந்துகொண்டனர். அஸிமுல்லாகான் என்ற ராஜதந்திரி லண்டன், பாரிஸ், மாஸ்கோ நகரங்களுக்கெல்லாம் சென்று புரட்சிப்பிரசாரம் செய்து, ஆயுதங்களையும் திரட்டிக் கொண்டு வந்ததும் தெரிந்தது. அதனால் இந்த இரண்டு சகோதரரையும் பிரித்து ஊரை இரண்டாக்கினால் நாம் சுகமாக வாழலாம் என்பதை அன்னியர் கண்டுகொண்டனர்.

இரண்டுபேரையும் பிரித்துவிட அன்றுமுதல் எல்லாவிதத்திலும் சூழ்ச்சிசெய்தனர். அந்தசூழ்ச்சிதான் இன்று பாக்கிஸ்தானில் வந்து முடிந்து, இன்னும் கொடுமை செய்கிறது. மஹாத்மா காந்தி இரண்டு சமுதாயங்களையும் ஒன்றுசேர்க்கவே தியாகபலியானார்...

14. தர்மாத்மாக்கள்

நானாசாகெபு செய்த சுதந்தரப்போருக்குப்பிறகு இந்தியர் நிலைமை படுமோசமாகிவிட்டது. அன்னியமதங்கள் இந்துதருமத்தை உருக்குலைத்தன. பாதிரிகளும் முல்லாக்களும் பிரசாரம் செய்து பெருவாரியான ஜனங்களை மதமாற்றினர். படித்த இந்துக்களும் ஆங்கிலமோகம் கொண்டு வேததருமத்தைக் கேலிசெய்தனர்.

ராஜாராம் மோகனராய்

இதற்குமுன்பே ராஜாராம்மோகனராய் நாட்டுக்குப் புதிய விழிப்பையளித்தார்.

அடாணு—ஆதி

சத்திய சமரஸ தூதன்—ரா
ஜாராம் மோகன ராயே—
வித்தகன் ப்ரமஸமாஜம் —கண்டு
மேற்கையும் கிழக்கையும் இணைத்தான்.
மாதரை உயிருடன் எரிக்கும்—முழு
மடத்தனக் கொடுமையை ஒழித்தான்
ஜாதிமதகிறபேதம்—இன்றிச்
சமரஸக்கல்வியை அளித்தான்.

ராஜாராம் நவபாரதத்தின் உதயதாரகை. அவர் கொள்கை வங்காளத்தில் பரவியது. அதனுல் பெண்ணுரிமை செழித்தது. ஆங்கிலக் கல்வி தழைத்தது; பலர் பைபிள் படித்தனர்—ஆனுல், இந்தியா இன்னும் அந்தகாரத்தில் மூழ்கியிருந்தது. தர்மம் அதர்மத்தின் சூழ்ச்சியால் நலிந்தது. வேதம் இருந்த இடமே தெரியாது மறைந்தது! மூடக்கொள்கைகள் தம்பட்டமடித்துப் பரவின.

தயானந்தர்

இந்த நிலையை மாற்றி வேததர்மத்தை கர்ஜிக்க வந்த மகான் தயானந்த ஸரஸ்வதி, ஸத்தியார்த்தப்பிரகாசத்தில், நவபாரதத்திற்கு வேண்டிய சீர்திருத்தங்களை யெல்லாம் தெளிவாகக் குறித்தார்.

தயானந்தர் குஜராதி; சமுஸ்கிருதத்திலும் இந்தியிலும் வேத பிரசாரம் செய்து, பகைவர் வாளுக்கும் நஞ்சுக்கும் தப்பி, தர்மக் கொடியை நிலைநாட்டிய பரமாசாரியார். அவரை வணங்குவோம். அவர் செய்த உன்னதமான தொண்டு, பிரமசர்ய குருகுலக் கல்விக்கு புதிய எழுச்சி தந்ததேயாகும்.

பேஹாக்—ஆதி

வந்தனை செய்திடுவோம்—தயானந்த
வள்ளலை வாழ்த்திடுவோம்
சிந்தனை செய்திடுவோம்—அவன்வழி
தேசப்பணி புரிவோம்.
கல்வி பரப்பிடுவோம் —குருகுலம்
கண்டு நலம் புரிவோம்
வெல்லும் திறல் வளர்ப்போம்—ப்ரம்மச்சர்ய
வீறு மிகப்பெறுவோம்

சாதி பேதம் ஒழிப்போம்—சுத்த
சாதனம் செய்திடுவோம்
வேதக்கலே வளர்ப்போம்—அத்யாத்ம
வீரராய் வாழ்ந்திடுவோம்.

தயானந்தரின் சீடர்கள் இரண்டு மணிகள். அவருள் லாலாஜீ, தேச சுதந்தரத்திற்காக தியாகம் செய்த வீரர். சுவாமி சிரத்தானந்தர் தேசசேவையுடன் காங்கிரி குருகுலம் காட்டி, பிரம்மசரியக் கல்விக்காக அரிய தொண்டு செய்தார். வேதஞானம் ஆரியசமாஜத்தால் இன்று நிலைநிற்கிறது.

ஆனால், இந்தியாவில் படித்தபேர்களே நூற்றுக்கு எட்டு... சமுஸ்கிரதம்படித்து வேதப்பொருளை அறிந்து நடப்பவர் யார்? ஏதாவது நூறுபேர் வியாகரண நிருக்த ஞானத்துடன் வேதத்தை அறியலாம். முப்பதுகோடி பேர் கல்வியில்லாத இருளில் ஆழ்ந்திருந்தனர். சென்னை, பம்பாய், கல்கத்தாவில் நடந்த ஆங்கிலக்கல்வி முறைகள் சுதர்மவேரையே பெயர்த்துவிட்டது. எல்லாரும் வரவர அரைத்துரைமாராகிக்கொண்டிருந்தனர். ஹாட்பூட்—சுருட் நாகரீகமும், ஆங்கிலப்பேச்சுமே அந்தக்காலத்திற்கு வழக்கமாயின. வேதவேதாந்தஞானத்தை இவர்களுக்கு அனுஷ்டானத்தால் தெளிவாகக்காட்ட ஒரு மகா புருஷர் வந்தார்...

யோக சித்தி

தமிழ்நாடு முழுதும் எதிர்பார்த்த யோகசித்தி திருத்தப்பதிப்பு வெளிவந்துவிட்டது. இந்த அரிய நூலில் ஆணும்பெண்ணும் தெய்வஒளியுடன் இந்த உலகிலேயே பேரின்பம் பெற்று, எல்லாவகையிலும் பூரணமாக வாழும் யோகசாதனங்கள் விரிவாகக் காணும்.

250 பக்கங்கள்; அழகான அச்சு. ஒவ்வொருவரும் ஆயுளெல்லாம் வைத்துப்படிக்கவேண்டிய புனித நூல்...

விலை ரூ. 3. மூன்றே ரூபாய்தான்...முந்துங்கள்.

புதுயுக நிலையம்
புதுச்சேரி

ஜகன்மோகினி	இந்தியா,	ஸிலோன்.	பர்மா.	வெளிநாடு.
தனிப்பிரதி	அணு 4.	0—4—6.	0—5—0.	
வருட சந்தா	ரூ. 3.	3—8—0.	3—12—0.	

புது சந்தா நேயர்கள் கவனிக்கவும்

உங்களுக்கு ஜனவரி முதல் ஜூன் வரையுள்ள—ஓவியப்பரிசு காவல் அடங்கிய—சஞ்சிகைகள் வேண்டுமாயின் ரூ. 1—8. அனுப்பவும். கொஞ்சம் பிரதிகளே இருக்கின்றன.

183145

மோகினியின் மோகன சக்தி.

நான் ஐந்து வருஷகாலமாகத்தான் மோகினியை அனுபவிக்கும் பாக்கியம் பெற்றேன். இதைப்பற்றி நான் பலவருஷங்களாகக் கேள்விப்பட்டிருந்ததுண்டு. ஆனால்............முதலிய பத்திரிகைகளின் போக்காகவே இதுவுமிருக்கு மென்றெண்ணியே இதை வரவழைத்துப் பார்க்க ஆவலற்றவனாயிருந்தேன். இருக்கையில், ஒரு சமயம் தஞ்சாவூர்பக்கம் பிரயாணம் செய்கையில் நான் ஏறியிருந்த வண்டியில் சில ரஸிகர்கள் மோகினியைப் பேரின்பமாகப் படித்துக்கொண்டிருந்தபடியால் அப்போது அவ்வநுபவத்தில் நானும் பரவசமாக ஈடுபட நேர்ந்தது. அதுமுதலாக மோகினியில் எனக்கு ஒரு பைத்தியம் பிறந்துவிட்டதென்றே சொல்லலாம். அந்நாள் தொடங்கி இந்நாள்வரையில் முதல் தேதி என்று வரப்போகிறதென்றே எதிர்பார்க்கும் பித்தனாக ஆய்விட்டேன். ஏதேனும் காரணவசத்தினால், கிடைக்க வேண்டிய நாளில் இது கிடைக்காமற் போனால் அன்று என்னுள்ளம் படும்பாடு உள்ளுறையும் பகவானே உணரக்கூடியது.

மோகினியில் இல்லாத சுவை இல்லையென்றே எனது துணிபு. "அச்சுவைக்கட்டி யென்கோ அறுசுவை யடிசிலென்கோ" என்கிற திருவாய்மொழிப் பாசுரம் அனுசந்திக்கும்போதெல்லாம் எனக்கு மோகினியின் நினைவு வாராமலிராது. வைதிகர்கள் லௌகிகர்கள், பண்டிதர்கள் பாமரர்கள் என்கிற வாசியில்லாமல் அனைவரும் விரும்பி வாசிக்கக் கூடிய விஷயங்கள் நிரம்பிய பத்திரிகை இதுவேயாமென்கிற எனது ஆனந்தத்தை அன்பர்களுக்கு அறிவித்துக்கொள்ளாமலிருக்க முடியவில்லை.

மோகினியில் நான் ஈடுபடுவதற்குமுன் வெளிவந்த மலர்களையும் வெகு சிரமப்பட்டுச் சம்பாதித்து வாசித்து இன்புற்றேனென்றால் இனி என் வாழ்நாளில் இதன் அனுபவத்தை யிழக்க நேருமோ? இதற்காகவே எனது வாழ்நாளும் நீடித்துச் செல்லுக வென்று எம்பெருமானையும் வேண்டிக்கொள்ள அவசியமுளது.

அன்பர்காள்! மோகினியின் சுவையை என் போலவும் என்னிலும் மேலாகவு முணர்ந்திருக்கும் மகான்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது யாதொன்றுமில்லை. அதனை யுணரப் பெறாதவர்களுக்கு ஒரே வார்த்தை சொல்லி முடிக்கின்றேன்; "மானிடப் பிறவி பெற்றார்க்கு மோகினியின் அனுபவம் இன்றியமையாதது" என்னுமிவ்வார்த்தை யொன்றே.

— ப்ர. ப. அண்ணங்கராச்சாரியர்.

JAGANMOHINI is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. JAGANMOHINI is owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL. *Managing Editor:* V. M. SRINIVASAN, M.A., B.L.

வைத்தமாநிதி (யாம் மது சூதன்) மோகினியால் தேவர்க்குக் கடலமுதம் ஊட்டினனும், அன்று. இதையும் கேட்டதுண்டே தவிரக் கண்டதில்லை. வைத்த மாநிதியார் ஜகன்மோகினியால் பக்ஷபாதமில்லாமல் உலக முழுதிற்கும் கோதற்றக் கலையமுதை ஊட்டுகிறார்கள், இன்று. இது பிரத்யக்ஷம்.

ஜகன்மோகினியின் ஒவ்வொரு இதழையும் வாசிக்கும்பொழுது முதலில் இடுகுறிப் பெயராயிருந்த ஜகன்மோகினி யென்பது ஒரு காரணப் பெயராகிவிட்டதுதான் மனதில் முக்யமாய்த் தோன்றுகிறது. பொருத்தமான பெயர் : ஜகத்தையே மோகிப்பித்துப் பரவசப்படுத்துகிறதல்லவா? மற்றவர்களுக்கும், இம்மாதிரி பயனுள்ளதாயிருக்கவேண்டும்' என்ற உணர்வையளிக்கும் மோகினி மேலும் மேலும் ஸேவை புரிவாளாக!

— மோகினி அபிமானிகள்.